கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான முன்னணி நிறுவனம்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு, பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 25 செவ்வாய்க்கிழமை (11 — 10 — 1994) UTHAYAN A Lively N tional Tamil Daily கதிர் 321

## 15 ஆம் திகதி முதல் 4 நாள் தமிழின்பக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 11
யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் பல்துறைக் கண்காட்சி, இம்முறை எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரை நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நான்கு நாட்களுக்கு நடைபெறும் இக் கண்காட்சிக்கு ''தமிழின்பக் கண்காட்சி'' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த மண்ணைப் பற்றியும், மண்ணின் ஆக்கங்கள் பற்றியும், அவற்றை ஆதரித்து வளர்ப்பது பற்றியும் மக்களுக்கு உணர்த்துவதே தமிழின்பக் கண்காட்சியின் முக்கிய நோக்கம் என்று பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. டிவகலாலா நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

முதல் மூன்று நாட்களும் காலையில் கருத்தரங்குகளும், மாலையில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இறுதி நாளன்று ஓவியர் ஏ. மார்க்கும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்காக உழைத்து வரும் கலாநிதி க. கனகராசாவும் கௌரவிக்கப்படுவர்.

தமிழின்பக் கண்காட்சியை ஒட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் இறுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாலதியின் நினைவு நாள் உணர்வுடன் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11
தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் வீரச்சாவடைந்த முதல் பெண் போராளி 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நினைவு நாளை ஒட்டி பல்வேறு நிகழ்வுகள் குடாநாட்டில் நேற்று இடம்பெற்றன.

கோப்பாய்— கைதடி வீதியில் உள்ள மாலதியின் நினைவுத் தூபிக்கு நேற்றுக்காலை மக்களும், போராளிகளும் சென்று அஞ்சலி செலுத்தினர். மாலதியின் தந்தை நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செய்தார். கோப்பாய் சந்தியில் உள்ள மாலதியின் உருவப்படத்துக்கும் மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஈகைச்சுடரேற்றப்பட்டது.

சாவகச்சேரி நகரில் மாலதியின் உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அந்த உருவப்படத்தை திரைநீக்கம் செய்தார்.

நினைவு நாளை ஒட்டி குடாநாட்டின் பல இடங்களும் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வீதிகளில் பதாகைகளும் கட்டப்பட்டிருந்தன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் 'கோமாரி' இன்று பருத்தித்துறைக்கு வரும்

யாழ்ப்பாணம், ஒக். 11
ஏற்றி வந்த பொருள்களை இறக்குவதற்கு பருத்தித்துறைக்கு வராமல் கடந்த இரண்டு நாட்களாக காங்கேசனில் தரித்து நின்ற கோமாரி கப்பல், இன்று முதல் மீண்டும் பொருள்களை இறக்குவதற்கு பருத்தித்துறைக்கு வரும்.

நேற்று மாலை கிடைத்த செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை வந்த 'கோமாரி' கப்பல் வெள்ளி, சனிக்கிழமைகளில் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து பொருள்களை இறக்கியது. ஆனால் நேற்று முன்தினமும், நேற்றும் அக்கப்பல் பொருள்களை இறக்குவதற்கு பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரவில்லை.

கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வருவதற்கு படையினர் அனுமதி வழங்காததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட பதில் அரச அதிபரும், யாழ். செயலகத் திட்டப்பணிப்பாளருமான திரு. எஸ். பத்மநாதன் இந்த விடயம் தொடர்பாக கொழும்புடன் அவசரமாகத் தொடர்பு கொண்டதாகவும்—

அதனையடுத்து இன்று முதல் கப்பலை பருத்தித்துறைக்கு அனுப்ப இணக்கம் காணப்பட்டதாகவும் தெரியவந்தது. [உ-3-4]

## சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 11
நேற்று மாலை 5 மணியளவில் பலாலிப் பகுதியில் இருந்து படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் குப்பிளான் பகுதியில் சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

அவ்விடத்தைச் சேர்ந்த சிவலிங்கம் சுகிர்தரன் (வயது 13) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 11
கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# அரசு-புலிகள் நேரடிப் பேச்சுக்கு —குறுக்கே நிற்கிறது இந்தியா!—

## காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் மாலதி நினைவுக் கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 11
இந்திய இராணுவம் தமிழீழத்திலிருந்து வெளியேறிய பின்னரும் எமது பிரச்சினையில் மறைமுகமாகவோ, இரகசியமாகவோ இந்தியா தலையிட்டுக்கொண்டுதான் இருக்கிறது; எமது போராட்டத்துக்கு எதிராகச் செயற்படுகிறது. மக்கள் நலனுக்காக—விடிவுக்காக—நாம் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லத் தயாரான போதும் கூட இந்தியா அதற்குக் குறுக்கே நிற்கிறது.

இப்படிக் கூறினார் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன்.

நேற்றிரவு யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடந்த இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் ஏழாம் ஆண்டு நினைவுதினக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாம் பேச்சுக்கு தயாரான இந்த வேளையிலும் கூட இந்திய அரசும், உளவுப் பிரிவும் உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கின்றன.

நாங்கள் தமிழகத்தில் இருந்த போது, எமது தலைமையகத்துக்கு வந்த இந்திய வெளியுறவு அதிகாரி ஒருவர் ''நீங்கள் இலங்கை திரும்பினால், இலங்கை அரசு உங்களுக்கு தேவையான உதவிகளை வழங்கும்'' எனத் தெரிவித்தார்.

''அவர்கள் எமக்கு உதவி எதுவும் செய்யமாட்டார்கள்'' என்று அந்த அதிகாரியிடம் கூறினோம்.

அப்போது அந்த அதிகாரி ''எங்கள் ஏஜெண்டுகள் இலங்கை அரசில் இருக்கிறார்கள். அவர்கள் தேவையான உதவிகளை உங்களுக்கு வழங்குவார்கள்'' என்றார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை ஆரம்பிக்க முன் யுத்த நிறுத்தம்!

### இளம்பரிதி வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 11
தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் — சுபிட்சத்தை ஏற்படுத்தும் — தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடப்பதற்கு முதலில் யுத்த நிறுத்தம் ஏற்பட வேண்டும்.

— இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி.

நேற்றிரவு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடந்த இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் ஏழாவது ஆண்டு நினைவு தினக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

யாழ். மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

உத்தேச பேச்சுவார்த்தைகளில் சரியான தீர்வு காணப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதாரத்துறை சார்ந்த புலிகளின் திட்டங்களுக்குப் புகழாரம் சூட்டுகிறார் தெற்கு றோட்டறி பிரதிநிதி

யாழ்ப்பாணம், ஒக். 11
''யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பொருண்மியப் பிரிவினரால் கிராமிய மக்களுக்கு வழங்கப்படும் கடன் திட்டங்களின் நடைமுறைகள் தென்பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.''

இப்படிக் கூறினார் றோட்டறியன் ஜானக எதிரிசிங்க. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள — மூவரைக் கொண்ட — றோட்டறிக் குழுவினர் நேற்றுக் காலை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தைகளின் பின்னரே அக்குழுவில் இடம்பெற்ற றோட்டேறியன் ஜானக எதிரிசிங்க மேற்கண்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இப்போது நல்ல வேளை பிறந்துள்ளது. சமாதானம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உருளை வடிவ பொருளை குத்தியவர் உயிரிழப்பு!

### மற்றும் மூவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 11
அநாதரவாகக் கிடந்த உருளை வடிவமான பொருள் ஒன்றை எடுத்துவந்து ஊசி ஒன்றினால் அதனைக் குத்திய சிறுவன் ஒருவன் அது வெடித்ததினால் உயிரிழந்தான். மூன்று வயது குழந்தை உட்பட மூவர் காயமடைந்தனர்.

உரும்பராய் யோகபுரம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த இராசு சிவகரன் (வயது 14) என்பவரே உயிரிழந்தார்.

அந்தப் பொருளை எடுத்து வந்தவர் தனது வயிற்றுப் பகுதியுடன் அதை வைத்துக் கொண்டு ஊசி ஒன்றினால் குத்திய வேளை அது பெரும் சத்தத்துடன் வெடித்தது.

இதனால் அவரின் வயிற்றுப் பகுதி சிதறுண்டது. இடது கை முழங்கையுடன் துண்டிக்கப்பட்டது. ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர்

(6 ஆம் பக்கம் பார்க்க(

## ஓய்வு எடுக்கவே சந்திரிகா சிங்கப்பூர் சென்றார்

கொழும்பு, ஒக். 11
ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் குறுகியகால ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகவே பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா உத்தியோகபற்றற்ற விஜயத்தை மேற்கொண்டு கடந்த சனிக்கிழமை இரவு சிங்கப்பூர் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளத் தம்மை தயார்படுத்திக்கொள்ள இவ் விடுமுறையை சந்திரிகா பயன்படுத்திக் கொள்ளலாம் என்று வெரித்தாஸ் குறிப்பிட்டது.

அவர் நாளை புதன்கிழமை கொழும்பு திரும்புவார். அடுத்த நாள் கம்பஹாவில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்வார். (உ எ-6)

## சந்திரிகாவை ஆதரிக்க கூட்டணி, புளொட் முடிவு

கொழும்பு, ஒக். 11
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரான பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவை ஆதரிப்பதென தமிழர் விடுதலைக் கூட்டணியும் புளொட் அமைப்பும் தீர்மானித்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழு இம்முடிவை எடுத்திருக்கிறது. இது தொடர்பாக நேற்று மாலை தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கை ஒன்றை விடுத்தது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காண பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு சில சாதகமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## செல்லச்சாமியின் கட்சியும் சந்திரிகாவை ஆதரிக்கும்

கொழும்பு, ஒக். 11
முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமியின் இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொ. ஐ. மு. வேட்பாளரான பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவை ஆதரிக்க முடிவு செய்துள்ளது.

செல்லச்சாமி தலைமையில் ஹட்டனில் நடந்த இ. தே. தொ. காவின் விசேட கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மலையக தமிழர்களில் 75 சதவீதமானோர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவையே ஆதரிப்பர் என்று திரு. செல்லச்சாமி தெரிவித்தார்.

இம்முறை மலையகத் தமிழர்களின் வாக்குகளை தொண்டமானால் ஏலம் விடமுடியாது என்றும் அவர் சொன்னார். ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுக்கு ஆதரவும் வழங்கும்படி தாம் தொண்டமானைக் கோருவதாகவு அவர் சொன்னார். (உ-எ-6)

## வடமராட்சி கிழக்கு கடலில் மீனவர் மீது தாக்குதல்

தென்மராட்சி, ஒக். 11
வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் மீனவர் படகுகள் மீது நேற்றுக் காலை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எனினும் இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை.

கடற்பகுதியில் அதிகாலை முதல் தொடர்ச்சியாக வேட்டொலிகள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

புக்காரா விமானம் ஒன்று அதிகாலை 4 மணியளவில் அப்பகுதிகளை பலதடவைகள் சுற்றி நோட்டமிட்டது. நீண்ட நேரமாக விமானம் வட்டமிட்டதை அடுத்து அப்பகுதிகளில் மக்கள் பதற்றமடைந்தனர்.

இதேவேளை—நேற்று அதிகாலை 3 மணியளவில் 'புக்காரா' விமானம் வலிவடக்குப் பகுதிகள் மீதும் பறந்து நோட்டமிட்டது. ஹெலி ஒன்றும் அச்சமயம் அப்பகுதிகளில் வட்டமிட்டது.

## தீர்வு ஒன்றைக் காண 2,கட்ட அணுகுமுறை தேவை

### ரூபவாஹினிப் பேட்டியில் சிவத்தம்பி

கொழும்பு, ஒக். 11
இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இரண்டு கட்ட அணுகுமுறை தேவை.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி ரூபவாஹினிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டார். அப்பேட்டி நேற்று இரவு ஒளிபரப்பாகியது. சிங்களத்தில் சிவத்தம்பி பேட்டியளித்தார்.

15 நிமிட நேரம் இடம்பெற்ற இப்பேட்டியில் திரு. சிவத்தம்பி தெரிவித்த கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:

இனப்பிரச்சினை தொடர்பாக தீர்வு காணப்பட வேண்டிய விடயங்களை இரு கட்டங்களில் அடக்கி விடலாம்.

ஒன்று ஜீவனோபாயப் பிரச்சினை. அதாவது உணவு, போக்குவரத்து முதலிய அன்றாடப் பிரச்சினை.

மற்றையது அரசியல் அடிப்படை தொடர்பானது.

தமிழருக்கு எதிராக கைக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் கல்வி, விவசாயம், பொருளாதாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, கடற்றொழில் முதலிய அன்றாடப் பிரச்சினைகளால் தமிழர்கள் பெரும் பாதிப்புற்று வந்துள்ளனர்.

இப்பிரச்சினைகளால் தான் 1993 இல் தாம் இந்த நாட்டின் பிரஜைகள் அல்லர் என்ற உணர்வு தமிழர்களுக்கு ஏற்பட்டது. 1990 இல் கொண்டுவரப்பட்ட பொருளாதாரத் தடை அதனால் ஏற்பட்ட விலையேற்றம், பாதிப்பு ஆகியன ஸ்ரீலங்காவில் இருந்து வேறுபட்ட — தனிப்பிரிவான

[6 ஆம் பக்கம் பார்க்க]

## றோட்டறிப் பிரமுகர் விருப்பம்: சமாதான தூதுக்குழுவாக தெற்கு கிரிக்கெட் அணி!

### இங்கு அழைத்து வர முயற்சி



யாழ்ப்பாணம், ஒக். 11
சமாதானத் தூதுக்குழுவாக தெற்கில் இருந்து கிரிக்கெட் குழு ஒன்றை விரைவில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரத் தாம் விரும்புவதாக கொழும்பிலிருந்து வந்துள்ள றோட்டறி பிரதிநிதிகள் அணியைச் சேர்ந்த திரு. ஜானக எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

தமது இந்த விருப்பத்தை தாம் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன். பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோரைச் சந்தித்தபோது அவர்களிடம் தெரிவித்ததாகவும் —

அவர்களும் இம் முயற்சியை வரவேற்றதாகவும் அவர் மேலும் சொன்னார்.

தாம் அழைத்துவர உத்தேசித்துள்ள கிரிக்கெட் அணி

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ அச்சுவேலி புனித தெரேசாள்
ம. கல்லூரி
பழைய மாணவர் சங்க
## பொதுக்கூட்டம்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க புனருத்தாரண பொதுக்கூட்டம் சனிக்கிழமை [15 - 10 - 94] பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

**S. R.** மேரி எத்தல்வீவா **A. C.**
அதிபர்.

(33288)



## தொழில்நுட்பக் கல்லூரி
மாணவர் அவை
## மாபெரும் கலைநிகழ்ச்சி

சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக எம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட கலைநிகழ்ச்சி எதிர்வரும் **15 - 10 - 94** சனிக்கிழமை மாலை **6-00** மணிக்கு இடம் பெறும்.

மாணவர் அவை

பிறவுண் வீதி,
கொக்குவில்.

(33283)



## பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

சாவகச்சேரி நகர் சிக்கன கடன் உதவு கூட்டுறவு சங்கத்தின் ஆதரவில்
**14 — 10 — 1994** வெள்ளிக்கிழமை மாலை **3**மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பம்.

*தையல் வகுப்பு:*
ஆசிரியர்கள் திருமதி ராஜி பீடில்
*கேக்ஐசிங் வகுப்பு:*
ஆசிரியர் திருமதி செல்வராணி தேவராஜா
*நடனம்:*
ஆசிரியர்கள் செல்விகள் கௌரி, காயத்திரி (சகோதரிகள்)

இடம்: 10, தேவலாய வீதி, சாவகச்சேரி

[7954]


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி நடராசா அன்னம்மா
(நயினாதீவு 6 ஆம் வட்டாரம்)

மலர்வு: **1936 — 06 — 12**
உதிர்வு: **1992 — 10 — 11**

நிதமும் எம் நினைவில் நிலைத்துவிட்டாயம்மா இறைவனருள் வேண்டுகின்றோம் இன்னுயிரே உம் சாந்திக்காக.

தெய்வமே உனை நினைந்துருகும்;

ஆர். எம். நடராசா (கணவன்)
யாழ். அண்ணாமலை இசைத் தமிழ்மன்ற சங்கீத ஆசிரியர்,
கேசவமூர்த்தி (மருமகன் - கனடா),
திருமதி தர்மவதி (மகள் - கனடா),
தருமராசா (மகன் - பாங்கொக்),
ஆனந்தராசா, திருலோகநாதன் (மகன்மார் - நயினாதீவு).

10, ஐயனார் கோயிலடி,
நாவற்குழி.

(33161)

## 31-ம் தின நினைவஞ்சலி

மலர்வு: **10 — 08 — 1910**



உதிர்வு: **11 — 09 — 1994**

அமரர்
### காசிப்பிள்ளை தம்பித்துரை
(Former Manager Co-Op Stores, Hayes, Deniyaya)

வையத்தில் நாமுயர வாழ்வளித்தீர்
வானேகி எமை இன்று காக்கின்றீரே,
உள்ளத்தில் போற்றி உமை வணங்குகிறோம்,
ஒளியாக எம் மனதில் இருப்பீர் என்றும்!

மண்ணுலகில் வாழ்வளித்த எங்கள் ஐயா,
உங்கள் வாழ்வுதனை எமக்காக ஈந்தீர் ஐயா!
காலமெலாம் உம் நினைவால் வாழ்வோம் ஐயா,
கரைந்திடுமோ காலத்தில் உங்கள் எண்ணம்!

வாழ்வளித்து வையத்தில் வாழ்த்த தெய்வம்
மறைந்தின்று கழிந்ததுவே மாதமொன்று,
ஆயிரமாய் ஆண்டுகள் தாம் மறைந்திட்டாலும்,
ஐயாவே! அகலாதும் நினைவில் வாழ்வோம்.

தங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மக்கள், மருமக்கள், நண்பர்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

வேம்படி முருகமூர்த்தி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

(33282)

# வடமராட்சி கிழக்கில் இறால் வளர்ப்பு: போரூட் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

வடமராட்சி, ஒக். 9

வடமராட்சி கிழக்கு—குடத்தனை பொற்பதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள இறால் வளர்ப்புத் திட்டத்தை யாழ்ப்பாணம் வந்துள்ள போரூட் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

போரூட் நிறுவனத்தின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு. வீல்லைத போல் திட்டப்பணிப்பாளர் ஜனாப் எம். எஸ். மரைக்கார் ஆகிய இருவரும் கடந்த ஞாயிறு அங்கு விஜயம் செய்து பார்வையிட்டனர்.

விக்ரர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் கடந்த ஆடிமாதம் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்துக்கு இதுவரை 3 ஆயிரத்து 600 மனிதவலு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பயன்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-173)


## PERSONAL CLASS

இல. 14,
சிறாம்பியடி லேன்
யாழ்ப்பாணம்.

**A.L/95**
கணக்கியல்
Day Class

By: **A. S. A.**
கலைச்செல்வன்

ஆரம்பம்:
வியாழன் **(13-10-94)**
பிற்பகல் **12.30** மணி

(33285)


## மீளாய்வு செய்யப்பட்ட
# துணை மருத்துவ சேவை சம்பளத் திட்டம் நிறுத்தம்

சுகாதார சேவையில் துணை மருத்துவ சேவையில் உள்ள அலுவலர்களுக்கான மீளாய்வு செய்யப்பட்ட சம்பளத் திட்டத்தை அமுல் நடத்துவதை இடைநிறுத்தி வைப்பதென அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

நிதி அமைச்சின் நிதி நிலைமை மீளாய்வு செய்யப்படும் வரை இந்த இடைநிறுத்த உத்தரவு அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூச்சியியல் உதவியாளர், கண்வைத்திய உதவியாளர், சிறுவர் பற்சிகிச்சையாளர், பல்தொழில் நுட்பவியலாளர், சுகாதார கட்டடப் பரிசோதகர், மருத்துவ உணவு பரிசோதகர் உட்பட துணை மருத்துவ தரத்தில் உள்ள 11 பிரிவினருக்குரிய சம்பளத் திட்டம் 1-1-1988 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இடைநிறுத்தும் உத்தரவு சுகாதார, சமூக சேவைகள் அமைச்சின் செயலாளரினால் சகல மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## கல்விக் கண்காட்சி

வல்வெட்டித்துறை, ஒக். 11

வல்வை சிதம்பரக்கல்லூரியில் இன்று செவ்வாயும் நாளை புதனும் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை கல்விக் கண்காட்சி நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு. ச. யோகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த கல்விக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பளர் திரு. க. கந்தசாமி கலந்து கொள்வார். (ஒ-155)

## தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்றை நிறுவுவது தொடர்பான சட்ட மூலம் இப்போது நீதியமைச்சினால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வருட இறுதிக்கு முன்பாக இச்சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

மொறட்டுவப் பல்கலைக்கழக பதிவாளரினால் தொழில் நுட்பவியல் தேசிய டிப்புளோமாபயிற்சி நெறி – 1993/94 கல்வியாண்டுப் புதிய அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகளின் ஆகக் குறைந்த கல்வித்தகைமை: 1993 அல்லது அதற்கு முன்னர் நடத்தப்பட்ட க. பொ. த. (உ/த) பரீட்சையில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது இரண்டுக்கு மேற்படாத அமர்வில் நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரீட்சைப் பகுதிச் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பபடிவத்தினைப் பூர்த்தி செய்து 94–11–14 ஆம் திகதிக்கு முன்பாக உதிவிப் பதிவாளர், தொழில் நுட்பவியலாளர் கற்கைப் பிரிவு, மொறட்டுவப் பல்கலைக்கழகம், மொறட்டுவ என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று கேட்கப்படுகின்றனர்.

மேற்படி பயிற்சி நெறிக்கான முழு விவரங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரீட்சைக் கிளை அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம்.

- பதிவாளர்.
[சி-9310]



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மகாபொல கொடுப்பனவு

இரண்டாம் வருட மாணவர்களுக்கான 6ஆம், 7ஆம் தவணைப் பணங்களும், முதலாம் வருட மாணவர்களுக்கான 4ஆம் தவணைப் பணமும், ஏனைய வருட மாணவர்களுக்கான 7ஆம் தவணைப் பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. கொடுப்பனவிற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

— பதிவாளர்.
(சி-9309)


# பிரவேச பண்டித பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக் 11

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பண்டிதர், பாலபண்டித, பிரவேச பண்டித பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன.

பாலபண்டித பரீட்சை முடிவுகள் 8 – 10 - 94 ஆம் திகதி உதயனில் பிரசுரமானது தெரிந்ததே

பிரவேச பண்டித பரீட்சைக்கு குடாநாட்டில் உள்ள ஐந்து கல்விக் கோட்டங்களில் நடத்தப்பட்ட வகுப்புகளில் பயின்றவர்களும், கல்லூரிகளில் உயர்வகுப்பு மாணவர்களும், வெளியாரும் தோற்றினர்.

இப்பரீட்சையில் 55 பேர் சித்தி அடைந்துள்ளனர். 31 பேர் நூனசித்தி பெற்றுள்ளனர்.

பிரவேச பண்டித பரீட்சை முடிவுகள் வருமாறு:–

★ குறிப்பு — பரீட்சார்த்திகளின் பெயர்களுக்கு நேரே உள்ள அடைப்புக் குறிக்குள் கல்விக் கோட்டம், அல்லது அவர்களின் கல்லூரி, அல்லது தனிப்பட்ட விலாசம் இடப்பட்டுள்ளது.

### இரண்டாம் பிரிவில் சித்தி

க. கிருஷ்ணசாமி (சாவகச்சேரி), ஆ. இராஜேஸ்வரி (பருத்தித்துறை), பே. கனகதுர்க்கா (பருத்தித்துறை), வ. மஞ்சுளா (பருத்தித்துறை), த. பரீதா (பருத்தித்துறை), ஞா. ஞானரூபி (பருத்தித்துறை).

### மூன்றாம் பிரிவில் சித்தி
### யாழ். பரீட்சை நிலையத்தில் தோற்றியவர்கள்

ச. மணிமாறன் (யாழ். இந்து), கு. சிவகௌரி (யாழ். இந்து மகளிர்), மு. ரோஜா நிர்மலா, (யாழ் இந்து மகளிர்), பி. கோமுகி (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர்), க. விநோதினி (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர்).

ம. விஜிதா (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர்), ஜோ. பெலிசியா ஜயனி (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர்), த. பிரியதர்சினி (கரம்பொன் சண்முகநாத ம. வி), க. கேமலோசினி (திருக் குடும்ப கன்னியர்மடம்), யோ. அமொறின் (திருக் குடும்ப கன்னியர் மடம்).

ஞா. மேரிமாஜ் (திருக் குடும்பக் கன்னியர் மடம்), க. அமுத மங்கைநங்கை (யாழ். [illegible]), சி. லலிதா (வேலணை, கல்விக் கோட்டக் காரியாலயம்).

### நூன சித்தி

த. தவனேஸ்வரி (வேலணை), ச. முகுந்தன் (யாழ். இந்து), ஆ. மதிவதனி (யாழ். இந்து மகளிர்), இ. வானதி (இடைக்காடு மகா வித்தியாலயம்), நா. காஞ்சனா (சிறிய புஷ்ப மகளிர்).

பா. லீலயோகினி (திருக் குடும்பக் கன்னியர் மடம்), த. ரஜனி (திருநெல்வேலி), பே. பாக்கியலட்சுமி (கந்தர் மடம்).

### மானிப்பாய்ப் பரீட்சை நிலையத்திலிருந்து தோற்றியவர்கள்

சி. ஜோ. ஜக்குலின் (மானிப்பாய் – பண்டத்தரிப்பு), நா. சாந்தினி (மானிப்பாய் மகளிர்), செ. துஷாந்தி (மானிப்பாய் மகளிர்), ப. பத்மா தேவமலர் (இளவாலை மெய்கண்டான்), த. தயாநந்தன் (இளவாலை மெய்கண்டான்).

து. மதனராஜி (அளவெட்டி அருணோதயா), ந. விஜிதா (அளவெட்டி அருணோதயா), சி. யோ. ஜெஸ்லி (அளவெட்டி அருணோதயா).

### நூன சித்தி

க. கமலாதேவி (மானிப்பாய் – பண்டத்தரிப்பு), பா. விஜயா (மானிப்பாய் மகளிர்), பொ. விஜிதா (அருணோதயா).

### கொக்குவில் பரீட்சை நிலையம்

பே. விஜயநாதன் (கொக்குவில் இந்து), ஸ்ரீ. உமா சந்திரன் (கொக்குவில் இந்து), சி. வைதேகி (கொக்குவில் இந்து), த. தவனேஸ்வரி (இராமநாதன் கல்லூரி), ச. பாமதி (கொக்குவில் கிழக்கு), இ. குமுதினி (காங்கேசன்துறை வீதி, கொக்குவில்).

### நூன சித்தி

க. ஸ்ரீரஜினி (மருதனார் மடம்), ச. விநோதினி (மருதனார்மடம்), சு. சயாரூபி (இராமநாதன் கல்லூரி), ஐ. உதயகலா (கொக்குவில் இந்து), ச. விநோதினி (கொக்குவில் இந்து), தி. தாரணி (கொக்குவில் இந்து), இ. மீனாகுமாரி (கொக்குவில் மேற்கு).

### சாவகச்சேரி பரீட்சை நிலையம்
(பின்வரும் 24 பேரும் சாவகச்சேரிக் கோட்ட வகுப்பினர்)

### சித்தி

[illegible] கோபாலமூர்த்தி (சரசாலை), சே. சரவணபவானந்தன் (சரசாலை), நா. தவேந்திரராஜா (சரசாலை), கு. விஜயகுமார் (சாவகச்சேரி), க. நித்தியானந்தம் (மட்டுவில்).

ம. மதிவதனி (சரசாலை), ம. சுதமதி (சரசாலை), வ. வசந்தமலர் (மந்துவில்), தா. நடேஸ்வரி (கெருடாவில்), ந. சசிகலா (மட்டுவில்).

ஞா. மிதிலைச்செல்வி (கச்சாய்), க. மாலதி (மட்டுவில்), வீ. மகேந்திரகுமார் (குடமியன்), க. சிவப்பிரகாசம் (உசன்), பா. நந்தினி (கல்வயல்).

### நூன சித்தி

க. இராஜஜீவி (சாவகச்சேரி), இ. இராஜராகினி (சாவகச்சேரி), மு. பிரியதர்சினி (சாவகச்சேரி), வி. ஞானசக்தி (கல்வயல்), ஆ. மீனலோஜினி (கிராம்புவில்).

சு. சுகந்தினி (சரசாலை), ச. சகுந்தலாதேவி (கச்சாய்), வை. பிரேம்குமார் (சாவகச்சேரி), சு. சுதர்சினி (சாரசாலை).

### நெல்லியடிப் பரீட்சை நிலையம்

பொ. சிவனேஸ்வரி (பருத்தித்துறை), க. ராஜசுந்தரி (பருத்தித்துறை), பொ. சௌந்தரராணி (பருத்தித்துறை), து. சகிலா (வட. இந்து மகளிர்), க. தர்சினி (வட. இந்து மகளிர்), க. உமா (புலோலி), து. அருந்தவசீலன் (கரவெட்டி).

### நூன சித்தி

மு. சாரதாதேவி (பருத்தித்துறை), த. யசோதா (வட. இந்து மகளிர்), கு. கீதா (வட. இந்து மகளிர்), க. சுஜிதா (வட. இந்து மகளிர்).

## ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும்
# கலப்பதி 5 வருடங்கள் சிறையில் வாடியவர்!

கொழும்பு, ஒக். 11

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் வேட்பாளராக போட்டியிடும் நிஹால் கலப்பதி (38வயது)பூஸா தடுப்புமுகாமிலும் மகஸின் சிறையில் 5 வருடங்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மகஸின் சிறையில் வைக்கப்பட்டிருந்த போது சிறைச்சாலை அதிகாரிகள் கலப்பதியைக் கடுமையாகத் தாக்கி உடன் அவரது ஒரு காலையும் முறித்து விட்டனர் என்று முற்போக்கு முன்னணியின் தலைவர் ஆரிய புலேகொட தெரிவித்தார்.

ஜே. வி. பியின் அரசியல் குழு உறுப்பினராகவும் தகவல் செயலாளராகவும் பணிபுரியும் இவர், ருகுணு பல்கலைக்கழகத்தில் படித்துவிட்டு வெளியேறிய முதல்தொகுதி பட்டதாரிகளில் ஒருவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-ஒ)

## பிரச்சினைகளுக்குத் தீர்வு காண
# ப. நோ. கூ. சங்கங்களுக்கு நடவடிக்கைக் குழு!

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்.மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் நடவடிக்கைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். கூட்டுறவுச்சபை அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் பங்குபற்றிய கலந்துரையாடலின் போது இந்த நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டது.

கூட்டுறவுச் சபையின் தலைவர், கூட்டுறவுக் கோட்டங்களில் இருந்து தலா ஒரு பிரதிநிதி வீதம் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

# கிழக்கில் 4 ஆண்டுகளில் 7,000 பேர் கொலை

## நாடாளுமன்றில் சித்தார்த்தன்

''கிழக்கு மாகாணத்தில் 1990 ஆம் ஆண்டுக்குப் பின் 7,000 பேர் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் போயுள்ளனர். இவர்கள் தொடர்பாக விசாரணை ஒன்று நடத்தப்பட்டு உண்மை நிலை யாது என்பது பகிரங்கப் படுத்தப் பட வேண்டும்''.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. த. சித்தார்த்தன் அவசரகாலசட்ட நீடிப்பு விவாதத்தில் பேசியபோது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

கடந்த தடவை அவசரகாலச் சட்ட நீடிப்பு இடம் பெற்ற போது வடக்கும் கிழக்கும் இரண்டாகப் பிரித்துக் காட்டப்பட்டன. ஜோசப் பரராசசிங்கம் எம்.பி.இதை ஆட்சேபித்தார். இம்முறையும் இரு மாகாணங்களும் பிரிக்கப்பட்டே காட்டப்பட்டுள்ளன. விரும்புகிறோமோ இல்லையோ வடக்கும் கிழக்கும் ஒரே மாகாணமாக சட்டத்தினால் இணைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இரு மாகாணங்களையும் பிரித்துக் கூறுவது தவறாக இடம்பெற்றதா அல்லது வேண்டுமென்றே செய்யப்படுகிறதா?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 600க்கு மேற்பட்டோர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 16 வருடமாக இத்தடைச்சட்டம் அமுலில் உள்ளது. பயங்கரவாதத்தை ஒழிக்க இத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டாலும் அரச பயங்கரவாதத்தை வளர்க்கும் சட்டமாகவே அது கருதப்படுகிறது. தடுத்து வைத்தல், கைது செய்தல் ஆகியன இன்னமும் தொடர்கின்றன.

தென்பகுதியில் நடந்த தொலைகள் சம்பந்தமாக விசாரணைகள் நடத்தப்படுகின்றன; புதைகுழிகள் தோண்டி ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கிழக்கிலும் 90ஆம் ஆண்டுக்குப் பின் 7,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அல்லது காணாமல் போயுள்ளனர். இவர்கள் பற்றியும் விசாரணை நடத்த வேண்டும். (க)

## ஹெலி வேட்டு

தென்மராட்சி, ஒக். 11

நேற்று முன்தினம் மாலை 5–30 மணியளவில் நாகர் கோவில் வீதியில் சென்ற வாகனம் ஒன்றின் மீது ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (ஐ-117)


யா / அச்சுவேலி
புனித தெரேசாள் ம. கல்லூரி
## கலை நிகழ்ச்சிகள்

எமது கல்லூரியின் அபிவிருத்தி நிதி தொடர்பான கலைநிகழ்ச்சிகள் புதன்கிழமை **(12-10-94)** மாலை 6 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

1) மரணத்தை வென்றவர்கள்
2) சீதாபகரணம்
3) காலத்தின் தரிசனம்

ஆகிய நாடகங்களுடன் பல நாட்டிய நிகழ்வுகளும் இடம்பெறும்.

அன்பளிப்பு: **100/-, 50/-, 20/-, 10/-**

10-9-94 ஆம் திகதிய அன்பளிப்புச் சீட்டுக்கள் செல்லுபடியாகும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றேன்.

மேரி எத்தல் வீவா A. C.
அதிபர்

10-10-1994.
[33287]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக் குற்றம் புரிவோருக்கு பத்தாண்டு வரை கடும் தண்டனை

## சட்டமூலம் நாடாளுமன்றம் வருகிறது

கொழும்பு, ஒக். 11

மனிதனை சித்திரவதைப் படுத்துவது குற்றமாக கருதப்பட்டு தண்டனை வழங்கும் சட்டமூலம் இம்மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான சட்டமூலம் வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமரினால் அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சித்திரவதை, குரூரம் மற்றும் மனிதத்தன்மைக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றிய ஐ.நா சாசனத்தை இலங்கையில் அமுல் படுத்துவதற்காக இச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி — சித்திரவதைக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் மேல் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு குற்றவாளியாகக் காணப்படின், தண்டிக்கப்படுவார்.

சிறைத் தண்டனை ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமலும் பத்து ஆண்டுகளுக்கு அதிகமில்லாமலும் இருக்கும், அபராதமாக குறைந்தது பத்தாயிரம் ரூபாவும் ஆகக் கூடியது 50 ஆயிரம் ரூபாவும் விதிக்கப்படும்.

இலங்கைக்கு வெளியே வேறு நாட்டிலும் இலங்கையர் மீது புரியப்படும் சித்திரவதை தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் இலங்கை மேல் நீதிமன்றத்துக்கு இச் சட்டமூலம் வழங்குகின்றது.

இதற்காக இலங்கையின் நாடு கடத்தல் சட்டத்திலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

இலங்கையுடன் நாடு கடத்தும் உடன்படிக்கையைச் செய்து கொள்ளாத நாடுகளில் சித்திரவதை குற்றங்களைப் புரிந்த இலங்கையர்கள் இருப்பின், அவர்களை நாடு கடத்துவதற்கான உத்தரவை கஸட் மூலம் சித்திரவதைச் சாசனத்தின் கீழ் பிறப்பிக்கவும் இச் சட்டம் வெளியுறவு அமைச்சருக்கு அதிகாரம் வழங்குகின்றது. (இ-எ)

## புலிகளின் குரல் வானொலியில்

**11 — 10 — 1994**
**செவ்வாய் இரவு**

- ★ 8-01 — முதல் முதல் வீரச்சாவெய்திய பெண் போராளி 2 ஆம் லெப்ரினன்ட் மாலதி நினைவாக நடைபெற்ற நிகழ்ச்சிகளின்தொகுப்பு
- ★ 8-20 — நலந்தனா — நிகழ்ச்சியில் சமகாலத்தில் ஏற்படும் விபத்துக்களுக்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய ''சந்தி''
- ★ 8-50 — களமும் கானமும் — பாலா எழுதிய — கடலலை மீதினில்''

**12— 10 — 1994**
**புதன் காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் (தொடர்ச்சி

## சரியான பிரதிநிதிகள் வடக்கு - கிழக்குக்கு இல்லை

### நாடாளுமன்றில் அரச எம். பி.

''வடக்கு-கிழக்குக்கு இன்று சரியான மக்கள் பிரதிநிதிகள் இங்கு (நாடாளுமன்றத்தில்) இல்லை. நாலு, ஐந்து, ஆறு வாக்குகளால் தெரிவானோருடன் அவசர காலச் சட்டம் குறித்துப் பேசும் நிலை இன்றுள்ளது''.

அவசரகாலச் சட்டத்தை வடக்கு-கிழக்கிலும் மற்றும் சில பகுதிகளிலும் நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரை நிகழ்த்திய போது களுத்துறை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி எம். பி. றெஜினோல்ட் கூரே இவ்வாறு கூறினார். (க)

## அடுத்த ஜனாதிபதி யார்? மக்களுக்கு முடிவு தெரியும்!

### இப்படிக் கூறுகிறார் ரணசிங்க

கொழும்பு, ஒக் 11

அடுத்த ஜனாதிபதி யார் என்பதை மக்கள் ஏற்கனவே தீர்மானித்து விட்டனர்.

சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. ஏ. ஜே. ரணசிங்கா கடந்த சனியன்று கண்டியில் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டிருப்பின் நான் போட்டியிட முன்வந்திருக்கமாட்டேன்''— என்றும் அவர் தெரிவித்தார்.

படித்த, புத்திக்கூர்மையுள்ள இளம் சந்ததியினர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியை ஏற்படுத்தியுள்ளனர் என்று கூறிய அவர்—

தாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் தற்போதைய அரசாங்கத்தைப் பாதுகாக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

முன்னர் திரு. ரணசிங்கா கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்து புனித சின்னங்களைத் தரிசித்ததுடன், மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களிடம் ஆசியும் பெற்றுக் கொண்டார். (எ-க)

## புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ரூபவாஹினியின் தலைவர் புலிகளின் ஆதரவாளராம்!

### ஐ.தே.கவின் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 11

சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர் என்று கருதப்படும் வசந்தராஜாவை ரூபவாஹினியின் தலைவராக அரசு நியமித்துள்ளது.

ஐ. தே. கவின் களுத்துறை மாவட்ட எம்.பியான திலக் கருணாரத்னா கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

திலக் கருணாரத்னா முன்னர் சுதந்திரக்கட்சி எம். பியாக இருந்தவர். அப்போது அக்கட்சியில் ஹெல உறுமய அணித்தலைவராகவும் இருந்தார்.

சுதந்திரக்கட்சியில் இருந்து அநுரா வெளியேறியதை அடுத்து இவரும் அக்கட்சியில் இருந்து விலகி ஐ. தே. கவில் சேர்ந்து கொண்டார்.

## எம்பிலிப்பிட்டிய சம்பவம்:

## 10 படையினர், அதிபருக்கு எதிராக குற்றப் பத்திரிகை

கொழும்பு, ஒக். 11

எம்பிலிப்பிட்டியாவில் 32 பாடசாலை மாணவர்கள் காணாமற்போன சம்பவம் தொடர்பாக பத்து இராணுவத்தினர் மற்றும் ஒரு பாடசாலை அதிபர் ஆகியோருக்கு எதிராக இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தில் இன்று குற்றப் பத்திரிகைகளை சட்டமா அதிபர் தாக்கல் செய்வார்

சந்தேக நபர்கள் மீது 82 குற்றங்கள் சுமத்தப்படவிருப்பதாக சிரேஷ்ட அரச சட்டத்தரணி அனுரா மெதகொட தெரிவித்தார்.

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்படவுள்ள சந்தேகநபர்களின் விவரம் வருமாறு :—

பிரிகேடியர் றொஹான் பராக்கிரம லியனகே, லெப்டினன்ட் எச்.எல்.ஸி. கலப்பதி, சார்ஜண்ட்கள் உபுல் சந்தன, எஸ். ஏ.சேனரத்ன பிரியாந்த குமார்.

மேஜர்களான ஜாலிய எபாசிங்க, நவேந்திரா கினிகே, கப்டன் வஜிரா சமரசிங்க, சிப்பாய் ஜாக்ஸன் குமாரசிங்க.

எம்பிலிபிட்டியா மகா வித்தியாலய முன்னாள் அதிபர் தயானந்த லொக்கு கலப்பதி.

இச்சந்தேகநபர்களில் ஆறு இராணுவ அதிகாரிகள் இம் மாதம் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பிணையில் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## பெரிய வெங்காயம், மிளகாய், கிழங்கு இறக்குமதியைக் கட்டுப்படுத்த முடிவு

கொழும்பு, ஒக். 11

உப உணவுப்பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பெரிய வெங்காயம், மிளகாய் கிழங்கு போன்ற உப உணவுப் பொருள்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட உள்ளது.

உள்ளூர் அறுவடைக்காலத்தில் மேற்படி உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதாயின் மேலதிக வரி அறவிடப்படும்.

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் காணி விவசாய வனவள அமைச்சர் டி. எம் ஜயரத்ன இதனைத் தெரிவித்தார்.

அரச நிறுவனமோ அல்லது தனியாரோ மேற்படி பொருள்களை இறக்குமதி செய்வதாயின் விவசாய அமைச்சின் முன் அனுமதியைப் பெறவேண்டும் என்றும்—

எத்தனை தொன் இறக்குமதி செய்வது என்பதை, அறுவடை காலத்துக்கு ஏற்ப விவசாய அமைச்சு முடிவு செய்யும் என்றும் அமைச்சர் ஜயரத்ன தெரிவித்தார்.

கடந்த கால அரசு உள்ளூர் உற்பத்திக்குப் பாதகமான முறையில் நடந்து கொண்டது என்றும்—

இந்த உணவுப்பொருள்களுக்கான எல். சி. அறுவடை இல்லாத காலத்தில் திறக்கப்பட்டு அறுவடை காலத்தில் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்றும் அமைச்சர் கூறினார். (இ)

## பிரசாரத்தை சந்திரிகா அ' புரவில் ஆரம்பித்தார்

கொழும்பு, ஒக் 11

ஊழல் நிர்வாகத்துக்கு எதிராக மக்கள் ஆரம்பித்துள்ள யுத்தத்தின் இரண்டாவது கட்டம் புதிய ஜனாதிபதித் தெரிவுடன் (நவம்பர் 9ஆம் திகதி) ஆரம்பமாகும்.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் கடந்த சனியன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை அங்குரார்ப்பணஞ் செய்து வைத்துப் பேசுகையில் அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் வழிகள் மூலம் தீர்வு காணக்கூடிய இனப்பிரச்சினைக்காக பெருந்தொகைப் பணம் செலவழித்து யுத்தம் நடத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

சகல இன மக்கள் மத்தியிலும் சம உரிமையைக் கட்டி எழுப்பும் அமைதியான சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்பத் தாம் உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த பெரும்போகத்தின் போது நெற்செய்கைக்கான உரமான்யம் 50 முதல் 60 சதவீதம் வரை அதிகரிக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். (எ-க)

## சந்திரிகாவின் சமாதான முயற்சிக்கு சிங்கள மக்களின் ஆதரவு உண்டு

### சர்வோதயப் பிரமுகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக் 11

''இனப்பிரச்சினைக்கு தீர்வு காண பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா எடுத்து வரும் முயற்சிக்கு அஸ்கிரிய, மற்றும் மல்வத்த பீடாதிபதிகள் ஆதரவு வழங்கியுள்ளனர். எதிர்க்கட்சியான ஐ. தே. கவும் ஆதரவு தெரிவிக்க முன்வந்துள்ளது .முழு சிங்கள மக்களும்தமது பூரண ஆதரவு வழங்க தயாராகவுள்ளனர்''

இப்படிக் கூறினார் சர்வோதய அமைப்பின் உப- தலைவர் திருமதி ஆர். ஆரியரத்தின.

யாழ்ப்பாணம் வந்தவேளை அவர் முன் கண்டவாறு உதயனுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

இன்றுள்ள பிரச்சினை தமிழ் மக்களுக்குரியது மட்டுமானதல்ல இது நாட்டில் உள்ள சகல மக்களையும் பாதிக்கும் பிரச்சினையாகும்.

இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காண சந்திரிகா எடுத்து வரும் சமாதான முயற்சிகள் வெற்றி பெற சகல சிங்கள மக்களும் உதவத் தயாராகவிருக்கின்றனர்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட வேண்டும் என்று சகலரும் பிரார்த்திக்க வேண்டும்— என்றும் அவர் தெரிவித்தார். (எ-3)


சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்கானை.

**கேள்வி அறிவித்தல்**

**லொறி விற்பனை**

சங்கானை பல நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான த1-4254 (24/8394)இலக்க மொறீஸ் நோமல் லொறியை விற்பனை செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விக்கான விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படி சங்கத்தில் ரூபா 50/-கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மீளளிப்பு வைப்புக் கட்டணமாக ரூபா 1000/-செலுத்தப்படல் வேண்டும். கூடிய கேள்விக்காரருக்கு லொறியை விற்பனை செய்வதுடன், இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பு சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு உண்டு. லொறியை பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் 25-10 94ஆம் திகதி பி. ப. 4-00மணிக்கு முன்னதாக 'தலைவர், சங்கானை ப.நோ. கூ. சங்கம் சங்கானை', என விலாசமிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''த1-4254 (24/8394) இலக்க வாகனத்திற்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

-பொது முகாமையாளர்.

சங்கானை,
08-10-94

(சி/9502)



**வானொலி நாடக, சிறுகதை போட்டி**

கனடா, ரொறன்ரோ பெருநகர்
ஆசியா வானொலி - தமிழ் ஒலிபரப்பு
நடத்தும்

வானொலி நாடக, சிறுகதைப் போட்டிகளுக்கான பிரதிகள் வரவேற்கப்படுகின்றன.

1. நாடகப் போட்டி:
நாடகம் 15 நிமிடங்கள் ஒலிபரப்பக் கூடியதாக, 4 தொடக்கம் 6 வரையிலான தொடர் பகுதிகள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
1ஆவது பரிசு — ரூபா 1.000-00
2ஆவது பரிசு — ரூபா 650-00
3ஆவது பரிசு — ரூபா 350-00

2. சிறுகதைப் போட்டி:
சிறுகதை 10 முதல் 15 நிமிடங்கள் வரை ஒலிபரப்பக் கூடியதாக அமைதல் வேண்டும்.
1ஆவது பரிசு — ரூபா 500-00
2ஆவது பரிசு — ரூபா 300-00
3ஆவது பரிசு — ரூபா 200-00

(சிறுகதையில் பாடல்கள் சேர்க்கப்படலாம், அப்படி சேர்க்கப்படுவதாயின் படத்தின் பெயர், பாடலின் முதல்வரி, பாடியவர் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும்.)

பொதுவான விதிகள்:
1. ஆக்கங்கள் வேறு ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படாதவையாகவும், தற்கால சமூக, வாழ்க்கைப் பிரச்சினைகளை மையமாக வைத்து பின்னப்பட்ட கற்பனை வடிவங்களாகவும் இருக்க வேண்டும்.
2. பரிசு பெறும் ஆக்கங்கள் ரொறன்ரோ ஆசியா வானொலி தமிழ் ஒலிபரப்பில் ஒலிபரப்பாகும் (இந்த ஒலிபரப்பை ரொறன்ரோ பெருநகர எல்லைக்குள் செவிமடுக்க முடியும்)
3. பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்படாத, ஆனால் ஒலிபரப்புக்குத் தகுதியுள்ள ஆக்கங்கள் ஒலிபரப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டு வழமையான சன்மானம் வழங்கப்படும்.
4. பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.
5. போட்டி தொடர்பாக எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது.
6. பரிசுத் தொகை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். எனவே சரியான அஞ்சல் முகவரி குறிப்பிடப்பட வேண்டும்.
7. முடிவு திகதி: 14 — 11 — 1994
8. அனுப்ப வேண்டிய முகவரி:
இல. 704,
மே/பா உதயன்,
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[சி-9306]


# நன்னீர் பற்றாக்குறையை நீக்க யாழ். நீரேரித் திட்டமே ஒரே வழி

### இ. த. இராமச்சந்திரன் (பொறியியலாளர்)

தண்ணீர் மனிதனுக்கு மிகவும் அவசியமானது.

வருடாந்தம் கிடைக்கும் மழையின் மூலம் எமக்குப் போதியளவு நீர் கிடைக்கின்றது.

ஆனால் அதனை தேக்கி, சேமித்து முழுமையாக உபயோகிக்கும் திறமை எம்மிடம் உரிய அளவு இல்லை என்றே கூறவேண்டும்.

எமக்குக் கிடைக்கும் மழையில் பெரும்பகுதி பாவனைக்குக் கிடைப்பதில்லை. அத்துடன் விரயமாகி கடலில் சேரும் மழை நீருடன் மண்ணும் அதிலுள்ள பயன்தரும் பசளையும் அள்ளுண்டு சென்று வீணாகின்றன.

யாழ். குடாநாட்டின் தேவைக்குரிய தண்ணீர் தரைக் கீழ் உள்ள தேக்கங்களிலேயே சேகரிக்கப்படுகின்றது.

வருடம் முழுவதும் நாம் இறைத்து எடுக்கும் தரைக் கீழ் நீர் மழையால் மீண்டும் நிரப்பப்பட வேண்டும்.

மழைமூலம் எமக்குப் போதிய நீர் கிடைத்த போதும் திட்டமிடாத குடியமர்வுகள், ஒழுங்கற்ற விவசாயம், நீர்வளம் பாதிப்புறாமல் கவனிப்பதற்கு உரிய கண்காணிப்பு செயற்பாடுகள் இல்லாமை ஆகியவற்றின் காரணமாக ஆங்காங்கே நீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதும், தரக்குறைவான குடி தண்ணீர் பாவனைக்கு உட்படுத்தப்படுவதும் சாதாரண நிகழ்வுகள் ஆகியுள்ளன.

**நீர் பற்றாக்குறையை நிவர்த்திக்கும்திட்டம்**

நீண்டகால நோக்கில், யாழ். குடாநாட்டு நீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இரண்டு வழிகள் உண்டு. அவை வருமாறு;

1. யாழ். குடாநாட்டின் குடி அமர்வுகளைக் கட்டுப்படுத்தி பெருநிலப்பரப்பில் புதிய குடியிருப்புகளை ஊக்குவித்தல்.

2. நீர்வள அபிவிருத்திகளை மேற்கொள்ளல்.

நீர்வள அபிவிருத்தியாக யாழ்ப்பாண நீரேரிகளை நன்னீராக்கும் திட்டம் பல காலமாக முன்வைக்கப்பட்டு வருகிறது. ஆனால் இது வரை இது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இத்திட்டத்தின் ஊடாக யாழ். குடாநாட்டின் நன்னீர்த் தேவையை முழுமையாகப் பூர்த்திசெய்ய முடியும்.

ஏரிகளை நன்னீராக்குவதன் மூலம் தரைக்கீழ் நீர்த் தேக்கங்களும் நன்னீராகின்றன. மேலும், தீவகம் உட்பட குடாநாடு முழுவதும் நன்னீர் விநியோகத் திட்டத்தை மேற்கொள்ளவும் இது வழி வகுக்கும்.

**கடல்வளமும் பாதிக்கப்படலாம்**

இந்நன்னீர்த் திட்டத்தை அமுலாக்க முயலும்போது இரண்டு விடயங்கள் முதலில் கவனிக்கப்பட வேண்டும்.

1. ஏரிகளில் மேற்கொள்ளப்படும் கடற்றொழில் நடவடிக்கை.

2. இத்திட்டத்திற்கு வேண்டிய நிதி.

கடல் தொழில் மேற்கொள்ளப்படும் சில இடங்களை நன்னீராக்குவது குறித்து ஆராயப்பட்ட போது தொழில் பாதிப்பை விட கடல் வளம் பாதிப்புறக்கூடிய வாய்ப்பு இருப்பதையும் உணரக் கூடியதாக உள்ளது.

எனவே சில கடல் இனங்கள் இயற்[illegible] உற்பத்தியாகும் சூழல் உள்ள கண்டிக்குளம், [illegible] பொன்னாலை போன்ற இடங்களைத் தவிர்த்து ஏனைய ஏரிகளை நன்னீராக்குவது கடல் தொழிலைப் பொறுத்தவரையில் பாதிப்புக் குறைந்த செயற்பாடாக அமையும்.

எனினும் இன்றைய கால கட்டத்தில் கடல் பிராந்திய தடை நடைமுறையில் உள்ளதால் பொதுவாக முழு வருமானமல்லாத பகுதிநேர கடல் தொழில் செயல்பாடுகள் குடாநாட்டு ஏரிகளில் நடைபெறுகின்றன. இது தற்காலிகமானது.

எனவே நீண்ட கால நோக்குடைய ஏரிகளை நன்னீராக்கும்—திட்டம் முன்னுரிமை பெறுகின்றது.

மேலும் இப்போது பாதிக்கப்பட்டுள்ள கடல் தொழிலாளர்களுக்கு நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம் அல்லது மாற்றுத் தொழில் போன்றவற்றில் முழுமையான நிரந்தரமான வருமானம் வரும் நிலை உருவாகும்.

இத் திட்டத்துக்கான நிதியை யாழ். குடாநாட்டிற்கு என ஒதுக்கப்படும் நிதியிலிருந்தே பெற வேண்டும்.

இந்த நிதித்தொகை [illegible] போது யாழ். குடாநாட்டி[illegible] [illegible] ஒரு [illegible]டத்திற்கு வேண்டிய சீனி அல்லது கோதுமை மாவின் பெறுமதியிலும் குறைந்தது.

நிதியல்ல பிரச்சினை. கிடைக்கும் நிதியை இத்திட்டத்திற்கென ஒதுக்கச் செய்வதே பிரச்சினையாகும். இதற்கு இந் நன்னீர் ஏரித்திட்டத்தின் முக்கியத்துவத்தை சகலரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எமக்கு ஒரு தன்னிறைவான பொருண்மிய வளர்ச்சி வேண்டில் அடிப்படைத் தேவையான நன்னீரைப் போதியளவு எங்கும் கிடைக்கச் செய்யவேண்டும்.

எமக்கு வேண்டிய விவசாய செயற்பாடுகளுக்கு பெருநிலப்பரப்பில் போதிய நிலம் உண்டு. கடல் தொழில் செயற்பாட்டுக்கு வேண்டிய கடல் குடாநட்டைச் சுற்றியுண்டு.

எனவே சகலரும் இந் நன்னீராக்கும் திட்டத்தைத் தயக்கமின்றி ஏற்பார்கள் என்று கூறமுடியும்.

இந்த நோக்கில் யாழ்ப்பாண நீரேரித் திட்டம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியால் முன்வைக்கப்படுகிறது. இது வரவேற்கத்தக்க ஒரு அபிவிருத்தித் திட்டமாகும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3 அங். 4 அங். எஸ்லோன் பைப்புகள், எனாமல் பெயின்ற் ரின்கள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், அலுமினியம் ஆப்ப தாச்சிகள், பொலித்தீன்தாள், செொப்பிங் பாக் சகல அளவுகளிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், இல. 213C, கிட்டுசாலை, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (33180)

### கோழிக்குஞ்சு விற்பனை

ஒவ்வொரு செவ்வாயும் புதனும் நல்லின பிறிமா புறொயிலர் குஞ்சுகள் தனிச்சிவப்பு குஞ்சுகளும் விநியோகிக்கப்படும். 4 நாட்கள் வளர்ச்சியடைந்த புறொயிலர் குஞ்சு 42 ரூபா, பிலிமத் கறுப்பு வரிக் குஞ்சுகள் 30 ரூபா, தனிச்சிவப்பு குஞ்சுகள் 35 ரூபா. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதி ஊடாக, சிங்கம் வீதி, உடுவில். (7666)

### மேசை உபகரணங்கள்

அலுவலக மேசைக்கு உகந்த குண்டுசி, கிளிப்புகள் போட்டுவைக்க, தனித்தனி கிண்ணங்களுடன் பென்சில், பேனை வசதியாக வைப்பதற்கும் முற்றிலும் எவர்சில்வரில் வடிவமைக்கப்பெற்ற சாதனம், தனியாகவோ, மொத்தமாகவோ விற்பனைக்குள்ளது. ''மில்க்வைற்''. (சி–9301)

### மெஷின்மன் தேவை

பிளேட்டின் அச்சியந்திரத்தில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஒரு மெஷின்மன் உடனே தேவை. பிளேட்டின் மெஷின் அச்சிடும் வேலை பழகுவதற்கும் ஒரு இளைஞர் தேவை. நேரில் வருக. ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். (சி–9400)

### இசை வகுப்புகள்

விஜயதசமி ஆரம்ப வகுப்புகளிற்கு சேரவிரும்புவோர் 5–10–94 (புதன்) முதல் 14–10–94 (வெள்ளி) வரை விண்ணப்பப் படிவங்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அலுவலக நேரம் 4–30 — 6–30 (மாலை) யாழோசை, 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33117)

## தொங்கு பாலம் விழுந்து 38 பேர் மரணம்

தென் சீனாவின் கன்ரன் நகருக்கு அருகே ஒரு சுற்றுலா வாசஸ்தலத்தில் தொங்கு பாலம் ஒன்று சரிந்து விழுந்ததால் 38 பேர் உயிரிழந்தார்கள்.

மாணவர்கள் சிலர் இப் பாலத்தில் வேகமாக ஆடியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டது என அறிவிக்கப்படுகிறது.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆங்கில ஒன்றியத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை புதன் கிழமை முற்பகல் 9–30 மணிக்கு நடைபெறும். பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். ஆங்கில நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன. (சு)

## அறிவிப்பாளர் கொலையில் இருவர் கைது

வன்னி ஒலிபரப்பு சேவையின் பகுதி நேர அறிவிப்பாளரான ஜிப்ரி ரஜாப்டீன் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவரை வவுனியா பொலிஸார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விடுத்த பணிப்புரையைத் தொடர்ந்து பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர் என வவுனியா பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் கே. மோகன்தாஸ் தெரிவித்துள்ளார். (இ-ஐ)

---


யாழ். மத்திய கல்லூரியின்

## உதைபந்தாட்ட நூற்றாண்டு விழா

இன்றைய ஆட்டம்

**STANLEY VS J CENTRAL**

[33274]


---


## பரத நாட்டிய வகுப்பு

தரம் I, தரம் II பிரிவுகளுக்கு
புதிய மாணவிகள்
சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஆரம்பம்: **14 - 10 - 1994**
(வெள்ளி) பிற்பகல் 4.00 மணி

## ★ கலாலயா ★

(தொழிற் பயிற்சியகம்)
விக்டோரியா வீதி, யாழ். நகர்

[சி–9307]


---

யாழ். வண்ணை சிவன் கோயில்

## நவராத்திரி சிறப்புச் சொற்பொழிவு

இன்று (11 — 10 — 1994) மாலை 5 மணிக்கு
கம்பன் கழக அமைப்பாளர்
திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
**''அவன் அருளாலே அவன் தாள் வணங்கி''**
எனும் பொருள் பற்றி சிறப்புப் பேருரை ஆற்றுவார்

12 — 10 — 1994 அன்று
**''காலமும் கருத்தும்''**
எனும் பொருள் பற்றியும்

13 — 10 — 1994 அன்று
**''தளர்வறியா மனம்''**
எனும் பொருள் பற்றியும்

மாலை 5.00 மணிக்கு
தமிழருவி த. சிவகுமாரன் அவர்கள்
சொற்பொழிவாற்றுவார்.

அனைவரும் அன்புடன் வருக!

- தேவஸ்தானம்.

[சி-9501]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 11 — 1946
மறைவு: 22 — 09 — 1993

### அமரர் சண்முகம் சின்னையா

(திருவள்ளுவர் சனசமூக நிலைய முன்னாள் செயலாளர், ஆனைக்கோட்டை)

திதி: 11 — 10 — 1994

தேன் மொழிகலந்து திக்கெல்லாம் பேசிவந்து
வான் வெளிபோல் வஞ்சனையில்லா வசனம் தந்து–நீ
காலனுக்கு இரையாகி காலமோ ஓராண்டாகி
கலங்கிறோம்; தவிக்கிறோம் தரணியில் உனை எண்ணி!

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்;
மனைவி:-
திருமதி சின்னையா பராசக்தி.

24/2, நக்காறோட்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (33234

---

பரலோக

## 7ம்-ஆண்டு நினைவில்

### செல்வன் ஜோர்ஜ் எட்வின் கமிலஸ்

(கமி)
(A/L மாணவன்)

அன்னை மடியில்: **1968—10—17**
இறைவனடியில்: **1987—10—12**

அன்பு மகனே! ஐயா காலையில் போனவழி பார்த்திருந்தோம். காத்திருந்த வழிதனிலே குருதி தோய்ந்த உம் உடலையே தோழர்கள் ஏந்தி வந்தார்கள் ஐயா! அப்பாவும், அம்மாவும் உம் நான்கு உடன் பிறந்தவர்களும் இன்னும் உம் நினைவில், நாளும் பொழுதும் துன்பமும் வறுமையும் வாட்டுதையா எம் வாழ்வில். கண்ணீருடன் இறைவா! என் அன்பு மகனின் பாவங்களை மன்னித்து பரலோக வாழ்வை அளித்தருளும். (தாய்) நன்றி.

அன்பு மகனின் ஆன்ம பூசை பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் நாளை (12–10–94) புதன் கிழமை காலை 6–15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

மனம் வெதும்பும்:
அப்பா (ஜோர்ஜ்), அம்மா (திரேசா),
அண்ணன் றெமி(லண்டன்), அக்கா ஜெமி,
அத்தான் அருள், மருமகள் செவனி,
(மூவரும் கனடா)
தங்கைமார்: எமி, வெனி.

இல:951/12, வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (33236)

---


## வாணி விழா

இடம்: நாவலர் கலாசார மண்டபம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: இன்று (11 - 10 - 1994) செவ்வாய்
மாலை 2. 30 மணி

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி–9308)


---

புங்குடுதீவு
அம்பாள் விளையாட்டுக் கழகம்
நடத்தும்

## மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

இடம்: யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானம்

காலம்: 13 - 10 - 1994] தொடக்கம்
16 - 10 - 1994 வரை

போட்டிகள்:
13ஆம், 14ஆம் திகதிகளில்
மாலை 2மணி

15ஆம், 16ஆம் திகதிகளில்
காலை 8மணி தொடக்கம்
மாலை 5மணி வரையும்

பங்குபற்றும் தலைசிறந்த அணிகள்:

01. சென். அன்ரனீஸ் வி. க. — பாசையூர்
02. சென். மேரீஸ் வி. க. — நாவாந்துறை
03. றோயல் வி. க. — ஊரெழு
04. லவனிதா வி. க. — தீவகம்
05. பொற்பதி வி. க. — கொக்குவில்
06. அண்ணா வி. க. — அராலி
07. அரியாலை ஐக்கிய வி. க. — அரியாலை
08. கலைவாணி வி. க. — நாவாந்துறை
09. யங்கென்றீஸ் வி. க. — இளவாலை
10. ஞானமுருகன் வி. க. — மயிலங்காடு
11. சிறிதாஸ் வி. க. — சாவகச்சேரி
12. யங்றோயல் வி. க. — காங்கேசன்துறை
13. விநாயகர் வி. க. — அளவெட்டி
14. சென். தோமஸ் வி. க. — மாதகல்
15. சில்வஸ்ரார் வி. க. — மானிப்பாய்
16. சென். நீக்கிலஸ் வி. க. — நாவாந்துறை

★ இப்போட்டியில் வெற்றிபெறும் கழகங்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்பட இருக்கின்றன.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பாள் விளையாட்டுக் கழகம்,
புங்குடுதீவு.

[33278]

---

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்
### தில்லையம்பலம் கதிர்காமதாஸ்
(போதனாசிரியர், யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்)
[தமையனார்]

அன்னை மடியில்: 26-08-1955
அந்நியர் அழிப்பில்: 11-10-1987

அமரர்
### பண்டிதர் பசுபதி யோகானந்தன்
(எழுதுவினைஞர், உயர் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.)

அன்னை மடியில்: 01-03-1951
அந்நியர் அழிப்பில்: 11-10-1987

திருமதி
### பவானி யோகானந்தன்
(தங்கையும், மைத்துனரும்)

அன்னை மடியில்: 28-05-1958
அந்நியர் அழிப்பில்: 12-10-1987

கயிலாய பிள்ளையார் கோயில் வீதியில்
அயலே அமைந்த அழகாம் மனையில்
யாவரும் மகிழ்ச்சியில் இருந்த சமயம்
இந்தியன் ஏவிய ஏவு கணையே;
இயமனாய் வந்து எடுத்தனன் எழுவரை
ஆண்டுகள் ஏழே அகன்ற போதிலும்
பூண்ட பாசம் பொறுக்குமோ ஐயோ
அணையாத் தீபமாய்! அன்புத் தெய்வமாய்!
இருந்த மூவரும் உங்கள் பிரிவால்

அன்று தொட்டு இன்று வரையும்
ஆற்றொணாத் துயரில் அமிழ்கின்றோமே
எண்ணும் போதுளம் எரியாய் மூளும்
உண்ணும் உணவும் நஞ்சாய்ச் சுவைக்கும்
கண்கள் கலங்கிக் கடலாய்ப் பெருகும்
உன்மத்தர் ஆகி ஊமையர் ஆனோம்
இந்த உலகம் இருளாய்த் தெரியும்
உருவப் படங்கள் உயிரை வதைக்கும்
இதுவே எங்கள் ஏழாண் டஞ்சலி.

நெடுந்தீவு.

பெற்றோர், சகோதரர்கள் குடும்பம்,
பிள்ளைகள்: யோ. ரமணன், யோ. ரதீபன்.

(33270)

---

31ஆம் நாள்

## நீங்காத நினைவும் நன்றி நவிலலும்



திருமதி
### அப்பச்சிப்பிள்ளை சரஸ்வதி
(தாவடி)

மலர்வு: **07 — 01 — 1916**
உதிர்வு: **11 — 09 — 1994**

பத்து மாதம் சுமந்து எமையீன்று
பாசமுடன் எமை வளர்த்து
மகிழ்வுடனே இருந்து
விண்ணுலகம் சென்றீரோ அம்மா!
எமைப் பிரிந்து 31 நாள் ஆனாலும்
ஆறாது எம் துயர்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

11 – 09 1994 அன்று இறைபதமடைந்த எமதருமைத் தாயாரின் மரணச் செய்தி கேட்டு எமக்கு வந்து பல வழிகளிலும் உதவிகள் செய்தோருக்கும், ஆறுதல்கள் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. ச. சண்முகரட்ணம்.
(மகள்)

சதீஸ் இல்லம்,
பிள்ளையார் கோயிலடி,
தாவடி. (33266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## யதார்த்தத்தை புரிந்து கொள்க

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நாளை மறுதினம் ஆரம்ப சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதே தனது நோக்கம் என்று புதிய அரசாங்கம் அறிவித்ததுமே, போர் எப்போது நிறுத்தப்படும் என்பதே தொடர்ந்து வந்த கேள்வியாகியது. அரசாங்கம் தனது நல்லெண்ணத்தைக் காட்டும் வகையில், வடபகுதி மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையைத் தானாகவே தளர்த்தியது. அதுபோலவே போர் நிறுத்தத்தையும் தானாகவே அறிவித்து, பேச்சுவார்த்தைக்குரிய சுமுகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் என்று பலரும் எதிர் பார்த்தனர்.

புலிகள் – அரசு பேச்சுவார்த்தைக்கான முன்முயற்சிகள் நடந்து கொண்டிருந்த வேளையிலும், அரசு போர் நிறுத்தம் ஒன்றை அறிவிக்கும் என்றே பலமாக எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், சமாதானப் பேச்சுக்கு, சுமுகமான சூழ்நிலை தேவை என்பதனைக் கண்டுகொள்ள அரசு விரும்பவில்லை.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சுமுக நிலையைத் தோற்றுவிப்பதற்கு போர் நிறுத்தம் பெரிதும் உதவும் என்று, தலைவர் பிரபாகரன் பிரதமர் சந்திரிகாவுக்கு எழுதிய கடிதத்தில் எடுத்துக் கூறியிருந்தபோதிலும், அது குறித்து பெரிதாக ஆர்வம் காட்டப்படவில்லை.

பேச்சுவார்த்தையைத் தொடங்கி, அதில் முன்னேற்றம் காணும் பட்சத்தில் போர் நிறுத்தம் குறித்து யோசிக்கலாம் என்பதே அரசின் நிலைப்பாடாக இருந்தது; இருக்கிறது. அரசாங்கம் தானாகவே போர் நிறுத்தம் செய்தால், இராணுவ ரீதியில் அது பலவீனமாக இருக்கிறது என்று அர்த்தமாகிவிடும் என்று கருதப்பட்டது.

மேலும் பேச்சுவார்த்தை நடந்து தீர்க்கமான ஒரு முடிவுக்கு வராமல், போர் நிறுத்தம் செய்யக்கூடாது என்பது இராணுவ உயர்மட்டத்தின் ஆலோசனையாக இருந்தது. அத்தோடு, அரசாங்கம் பலமான நிலையிலேயே நின்று பேசவேண்டும் என்று மற்றும் சில சாரார் புத்திமதி கூறினார்கள்.

ஆனால் இப்போது...?

அரசாங்கம் தானாகவே முன்வந்து போர்நிறுத்தத்தை அறிவித்திருந்தால், அரசுக்குக் கௌரவமாக இருந்திருக்கும் என்று விமர்சகர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர். இனிமேல் அரசு போர் நிறுத்தத்தை அறிவித்தால், விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் மூலமான அழுத்தத்துக்குப் பணிந்ததாகவே முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அரசாங்கம் பலமான நிலையில் நின்றுதான் பேசவேண்டும். பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னரே பணிந்து போவதாகக்காட்டக்கூடாது. அவசரப்பட்டு போர் நிறுத்தத்தை அறிவித்துப் படையினரின் பகைமையைத் தேடிக் கொள்ளக்கூடாது என்றவாறான சிந்தனையுடன் அரசு செயற்பட்டதாலேயே, இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இத்தனைக்கும் சந்திரிகா பதவிக்கு வந்ததும், நிபந்தனையில்லாத பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகவே அறிவித்திருந்தார். இரண்டு சாராரும் சமமான நிலையில் நின்று மனம்திறந்து பேசி, சிக்கல்களை இயன்றளவு விடுவித்துக் கொள்வதே நிபந்தனையற்ற பேச்சின் நோக்கமாக இருக்கவேண்டும்.

ஆனால் அரசு, இது விடயத்தில் தீர்க்கமாக சிந்திக்காமல் செயற்படுவது, மக்கள் மத்தியில் பேச்சுவார்த்தை குறித்தும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசுக்கு உள்ள அக்கறை பற்றியும் சந்தேகத்தை உண்டாக்கும். அரசாங்கம் இனிமேலாவது யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயற்படப் பழக வேண்டும்.

# அமெரிக்கத் துருப்பினர் பெருமளவில் வளை குடாவை நோக்கிப் புறப்பாடு!

## எனினும் ஈராக் - குவைத் எல்லையில் அமைதி

பாக்தாத், ஒக். 11

ஈராக் — குவைத் எல்லையில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளதை அடுத்து ஆயிரக்கணக்கான அமெரிக்கத் துருப்புக்கள் வளைகுடா நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

எனினும் ஈராக் — குவைத் எல்லையில் அமைதி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 80 ஆயிரம் துருப்புக்களை குவைத்துடனான எல்லையில் ஈராக் குவித்திருப்பதாக அமெரிக்கா குற்றஞ் சாட்டி உள்ளது.

இதனைத் தவிர குவைத்துடனான ஈராக் எல்லையில் நிராயுத பாணிகளாக சுமார் மூவாயிரம் பேர் வரை கூடாரங்கள் அமைத்துத் தங்கி இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எல்லையில் குவைத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை இவர்கள் நடத்தலாம் என்று செய்தி ஏஜென்சிகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கிய படையினரே சிவில் உடையில் கூடாரங்களில் தங்கி உள்ளனர் என்று குவைத் கூறுகிறது.

ஐ. நா. அவதானிகள் குழு ஒன்று ஈராக் — குவைத் எல்லையில் நிலை கொண்டுள்ளது.

இதற்கிடையில் வளைகுடாவில் அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு சவூதி அரேபியா ஆதரவு தெரிவித்துள்ளது.

மேலும் 18 ஆயிரம் அமெரிக்க கடற்படை வீரர்கள் கலிபோர்னியாவில் உள்ள கடற்படைத் தளத்தில் இருந்து அடுத்த சில தினங்களில் வளைகுடா நோக்கி அனுப்பி வைக்கப்பட உள்ளனர். (இ)

## ரொறன்ரோ வானொலியில் தினமும் தமிழ் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஒக். 11

கனடா ரொறன்ரோ பெருநகரில் ஆசிய நாடுகளின் பண்பாட்டுக் கோலங்களைப் பேணவும், வளர்க்கவுமென நிறுவப்பட்டுள்ள "ஏஷியன் மல்ரி கல்ச்சரல் சென்ட்ரம்" (A. M. C. C.), "றேடியோ ஏஷியா" என்ற வானொலி ஒலிபரப்பை நடத்தி வருகிறது.

இந்த ஒலிபரப்பில் தமிழ் நிகழ்ச்சிகள், தினமும் இடம் பெறுகின்றன. வார நாட்களில் இரவு 9 மணியிலிருந்து 10 மணி வரையும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 10 மணியிலிருந்து 11 மணி வரையும் இந்த நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன.

சுமார் 60 ஆயிரம் இலங்கைத் தமிழ் மக்கள் வதியும் ரொறன்ரோ பெருநகர எல்லைக்குள் "எப் எம்" அலைவரிசையில் இந்த ஒலிபரப்பைச் செவிமடுக்க முடியும்.

தமிழ் நிகழ்ச்சிகளில் செய்திகளோடு, இசை, நாடகம், சிறுகதை, இசையும் கதையும் போன்ற பண்பாட்டு அம்சங்கள் ஒலிபரப்பாகின்றன. முக்கியமாக இலங்கை பற்றிய செய்திகள், தகவல்கள் என்பன இடம்பெறுவதுடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் இலங்கைச் செய்தித் தொகுப்பு ஒலிபரப்பாகின்றது. நேரடித் தொலைபேசி நேர்காணல்களுடன் ஒலிபரப்பாகும் இந்நிகழ்ச்சியை நடா தம்பு (செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் கிளையின் யாழ். அலுவலகத்தில் நிர்வாக அலுவலராக முன்பு பணி புரிந்த திரு. த. நடராசா) தயாரித்து வழங்குகிறார்.

"ஏ. எம். சி. சி." ஒரு இலாபம் கருதாத சமூக நிறுவனமாகும். இளைய தலைமுறையினரிடையே கலை, பண்பாட்டு உணர்வை வளர்க்க வேண்டும் என்பதற்காகவே இந்நிறுவனம் வானொலி சேவையையும் நடத்தி வருகிறது.

இந்த நோக்குடன் எமது இளைஞர், யுவதிகளை ஊக்குவிப்பதற்காக நாடக, சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்த "ஏ. எம். சி, சி." முன்வந்துள்ளது. (அ)

## மலேரியா பரவும் அபாயம்

தென்மராட்சி, ஒக். 11

மலேரியா நோய் மீண்டும் வேகமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அண்மைய மழையினால் நுளம்புகளின் பெருக்கம் ஏற்பட்டு மலேரியா அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

கடந்த மாதத்தில் மட்டும் தென்மராட்சி பச்சிலைப் பள்ளிப் பகுதிகளில் 345 பேர் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நாலுபேர் மூளை மலேரியாவினால் பீடிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (க-117)

## வங்கி ஊழியர் கூட்டம்

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணம் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவு மண்டபத்தில் நடைபெறும்.

## கம்யூ. கட்சி செயலராக ராஜா கொலுரே

கொழும்பு, ஒக். 11

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய பொதுச்செயலாளராக திரு. ராஜா கொலுரே தெரிவு செய்யப்பட்டார்.

கே. பி. சில்வா செயலாளர் பதவியை கடந்த மாதம் ராஜினாமாச் செய்ததை அடுத்து இத்தெரிவு இடம்பெற்றது. (ஒ-எ)

## சுபநேரம் வரும்வரை காத்திருந்த வேட்பாளர்

கொழும்பு, ஒக். 11

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் தினமான கடந்த 7 ஆம் திகதி காலை 9-00 மணி முதல் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யமுடியும்.

ஆனால் 10-04 க்கே முதலாவது வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

வேட்பாளர்கள் தமது லக்கினத்துக்கு ஏற்ப சுபநேரம் வரும் வரை வேட்புமனுத் தாக்கல் செய்யாது காத்திருந்தனர்.

10-04 க்கு முதலில் வேட்பு மனுத்தாக்கல் செய்தவர் சுயேச்சை வேட்பாளர் ஏ. ஜே. ரணசிங்க.

இவருக்கு அடுத்ததாக 10-06 மணிக்கு ஐ.தே.க. வேட்பாளர் காமினி திஸநாயக்காவும், 10-07 மணிக்கு இலங்கை முற்போக்கு முன்னணி வேட்பாளர் நிஹால் கலப்பதியும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

சிங்கள மஹாசம்மத பூமிபுத்திர கட்சி வேட்பாளர் டாக்டர் ஹரிஸ்சந்திர விஜேதுங்கா 10-10 மணிக்கு வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

கடைசியாக வேட்புமனு தாக்கல் செய்தவர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்க.

"நீல சேலையுடன் இவர் வந்த சமயம் "எதிர் கால ஜனாதிபதியே வாழ்க" என்று ஆதரவாளர்கள் கோஷம் எழுப்பினர்.

வேட்பு மனுத் தாக்கல் செய்ய முன்னர் ராஜகிரியாவில் உள்ள தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தில் வேட்பாளர்கள் போட்டியை மறந்த நிலையில் சிரித்து கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்ததைக் காணமுடிந்தது. (இ)

## செல்வாக்கு இழந்த நிலையில் தொண்டா பொ. ஐ. மு.வில் நுழைய எத்தனிக்கிறார்

தோட்டத் தொழிலாளர் மத்தியில் செல்வாக்கு இழந்த நிலையில் உள்ள தொண்டமான் இன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் நுழைவதற்கு எத்தனிக்கின்றார்.

பிரதி அமைச்சர் பி.பி.ஜி. கலுகல்ல முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமது ஆதரவு இன்றி எந்தக் கட்சியும் அரசாங்கத்தை அமைக்க முடியாது என்று தொண்டமான் கூறி வந்தார். கடந்த பொதுத் தேர்தலில் அது பொய்யாக்கப்பட்டு விட்டது.

துணிச்சலாகச் செயல்படும் பிரதி அமைச்சர் சந்திரசேகரனுக்கும் செல்லச்சாமிக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தலைவணங்குகின்றது என்றும் திரு. கலுகல்ல தெரிவித்தார். (ஒ-எ)

## ஆலயங்களில்

யாழ். வண்ணை ஸ்ரீவேங்கடேசன் வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை 10 - 15 மணிக்கு தேர் உற்சவம் நடைபெறும். காலை 8 - 00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை தொடர்ந்து சுவாமி தேரில் வீதி உலாவருவார்.

இரவு 7 - 15 தொடக்கம் 8 - 15 வரை உற்சவ கால சமயப் பேருரையில் திரு. சிவகுமாரன் 'விஸ்வரூபதரிசனம்' எனும் பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார்

# பயிலுநர் காலம் சேவைக் காலமாக கணிக்கப்பட வேண்டும்

## கருத்தரங்கில் ஆசிரியர் சங்கச் செயலர்

கொழும்பு ஒக். 11

சகல பயிலுநர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். அதே சமயம் அவர்களின் பயிலுநர் காலமும் சேவைக் காலமாகக் கணிக்கப்பட வேண்டும். இது சம்பந்தமான கோரிக்கையைப் புதிய அரசாங்கம் சாதகமாகப் பரிசீலிக்கும் என்ற நம்பிக்கை சங்கத்துக்கு உண்டு.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் மேற்கண்டவாறு கூறினார்.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் "எடியுக்கேசன் இன்ரநாஷனல்", "பிரட்ரிக் ஈபேர்ட்" மன்றம் ஆகியனவற்றுடன் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் இணைந்து "பயிலுநர் ஆசிரியாகளின் சட்ட ரீதியான அந்தஸ்து" என்ற விடயம் தொடர்பாக நடத்திய கருத்தரங்கின் ஆரம்ப விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு திரு. மகாசிவம் உரை நிகழ்த்தினார்.

முல்லை மாவட்டத் தலைவர் திரு. முருகதாசன் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. மகாசிவம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் வடக்கு மாகாணத்தில் சேவை செய்யும் பயிலுநர் ஆசிரியர்களின் சேவை மிகவும் போற்றுதற்குரியதும், வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதுமாகும். அவர்களின் பணி எவ்விதத்திலும் ஏனைய ஆசிரியர்களைக் காட்டிலும் குறைந்ததுமல்ல. குறைந்த வேதனத்துடன் அதிகூடிய சேவையையாற்றும் ஆசிரியர்களாகவே பயிலுநர் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

பயிலுநர் ஆசிரியர்கள் தமது சேவைகள், பொறுப்புக்களைப் பொறுத்த வரையில் ஏனைய ஆசிரியர்களுக்குச் சமமாக கணிக்கப்படுகின்ற போதும், வழங்கப்படும் வேதனம், உரிமைகள், சலுகைகளைப் பொறுத்த மட்டில் ஏனைய ஆசிரியர்களையும் விடக் குறைந்த நிலைமையுள்ளமை மிகக் கவலையளிக்கின்ற விடயம் ஆகும். ஆசிரியர் உலகத்தை கூறுபோட்டுப் பிரிக்கும் ஒரு சதித்தனமான அரசியல் வேலை.

சகல பயிலுநர் ஆசிரியர்களும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வழிகாட்டலைப் பின்பற்றி வந்தால் அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பது சுலபம் மட்டுமல்ல நிச்சயமானதும் கூட.

இப்படி அவர் கூறினார்.

# ஹட்சன் சமரசிங்காவின் பிரசாரம் யாழ். மாவட்டத்திலிருந்து ஆரம்பம்

## இன்று பலாலி வருகிறார்

கொழும்பு, ஒக் 11

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் திரு. ஹட்சன் சமரசிங்க தமது தேர்தல் பிரசாரத்தை யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இதற்காக அவர் இன்று பலாலிக்குச் செல்லவிருக்கின்றார் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்கள் மாவட்ட ரீதியிலும் தொகுதி ரீதியிலும் பிரசார வேலைகளை ஒழுங்கு செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்காவின் முதலாவது மாவட்ட ரீதியான கூட்டம் வருகிற வியாழக்கிழமை நுவரெலியாவில் நடைபெறும்.

பிரதமர் சந்திரிகா தலைமையில் மாவட்ட ரீதியான கூட்டங்கள் நடைபெறும். தொகுதி ரீதியான கூட்டங்கள் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டங்கள் மாவட்ட ரீதியாக காமினி திஸநாயகா தலைமையில் நடைபெறும். (இ-க)

# பொது வீதிகளைச் சிறந்த முறையில் பராமரிக்குமாறு தமிழீழ நிர்வாக சேவை பொதுமக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 11

"பொதுவீதிகளில் ஒழுங்கீனமான பாவனைகள் ஒரு சிலரால் மேற்கொள்ளப்படுகின்றபோது, பொதுமக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர். இது கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டியதாகும். பொதுமக்கள் நன்மைகருதி ஒழுங்கீனங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகின்றது"

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பொதுமக்களுடைய நாளாந்த வாழ்க்கையில் தேவையான உள்கட்டுமானங்களுள் பொதுவீதிகள் பிரதான இடத்தை வகிக்கின்றன.

பொது வீதிகளைப் பாவிக்கும் அனைத்துப் பாவனையாளர்கள், அவ்வீதிகளின் அருகாமையில் வசிக்கும் மக்கள், ஏனையோர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை ஒழுங்குகள் வருமாறு;

தனிப்பட்ட வீதிகள் தவிர்ந்த ஏனைய வீதிகள், வெவ்வேறு நிறுவனங்களால், நிர்மாணிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்பன இவற்றுள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒவ்வொரு வீதிகளும் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிலங்களும் அந்தந்த நிறுவனங்களுக்கே சொந்தமானவை. கடந்த பத்தாண்டு காலமாகப் பல்வேறு காரணங்களால் வீதிகள் உரிய முறையில் நிர்மாணிக்கப்படாமலும், பராமரிக்கப்படாமலும், சீரற்ற நிலைமையில் காணப்படுகின்றதை அவதானிக்க முடிகின்றது. எனினும் தற்போது அதற்குரிய நிறுவனங்கள் சில வேலைகளைத் தொடங்கியுள்ளன. இவ்வாறாகப் பல இடங்களில் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்படும் பொழுது, பொதுமக்களும் தமது மனப்பூர்வமான பங்களிப்பைச் செய்தல் அவசியமானது. அதனால் பின்வரும் விதிகளைத் தவறாது கடைப்பிடிக்கும் வண்ணம் சகல பொதுமக்களையும் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

1. வீதிகளும், ஒதுக்கப்பட்ட நிலப்பரப்புகளும் அவற்றைப் பொறுப்பேற்றிருக்கும் நிறுவனத்தின் [illegible].

2. வீதிகளும் அவற்றிற்குரிய நிலப்பரப்பும் போக்குவரத்துப் பாவிப்பைத் தவிர வேறு சொந்தப் பாவிப்பு எதற்கும் பயன்படுத்தலாகாது.

3. கட்டாயம் தவிர்க்கமுடியாத பட்சத்தில், அதுபற்றிக் குறிப்பிட்ட நிறுவனத்தின் தலைவரின் அனுமதியைப் பெறல்வேண்டும்.

4. வீதிகள் அவற்றின் பாவனையாளர்களின் வசதி, பாதுகாப்பு, சௌகரியம் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு, அமைக்கப்படுவதால் அவற்றிற்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் நடந்து கொள்ளலாகாது.

5. வீடுகள், கட்டடங்கள், மதில் சுவர்கள் மற்றும் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கும்போது 'ஏ' வகுப்பு, 'பி' வகுப்பு, 'சி' வகுப்பு வீதிகளின் மத்தியிலிருந்து குறைந்தபட்சம், 15 மீட்டர், 12 மீட்டர், 7.5 மீட்டர் இடைவெளி இருத்தல் வேண்டும். அவற்றை அமைப்பதற்கு முன்பு அந்தந்த நிறுவனத் தலைவரின் அனுமதி வேண்டும்.

6. வீதிகளின் தேவைக்காக ஒதுக்கப்பட்ட காணிப்பகுதிகளை அபகரிக்கும் விதத்தில் [illegible] எல்லைகளை மாற்றுதலாகாது.

7. வீதிக்கு உரித்தான மைல் கல், மைல்கட்டை, அளவு கட்டை, விளக்குத்தூண், வழிகாட்டித்தூண், பாலம், வளைவு, வடிகால் சுவர் தூண், விளக்கு, வேலி முதலியவற்றைப் பழுதுபடுத்தல், அழித்தல், கழற்றுதலாகாது.

8. வீதிகளின் திருத்த வேலைகள் நடக்கும்பொழுது தற்காலிகமாக அமைக்கப்பட்ட வேலி தூண், கல், மரக்குத்தி அல்லது வேறு பொருள்களையும் அகற்றுதலாகாது.

9. வீதியிலுள்ள கல், மண், சரளைக்கல், மணல் அல்லது வேறு எந்தப் பொருள்களையும் அதிகாரமின்றிச் சேர்த்தல், குவித்தல், எடுத்துச் செல்லல் தவிர்க்கப்படல் வேண்டும்.

10. எவராவது மாடு, ஆடு, பன்றி அல்லது வேறு மிருகங்களை வீதிக்குச் சேதம் ஏற்படும் வகையில் கொண்டு செல்லுதல் அல்லது செலுத்துதல் ஆகாது.

11. வீதியோரமாக உள்ள குடியிருப்பாளர் அல்லது காணி உரிமையாளர் வீதியால் வடியும் நீரின் பாதையைத் தடைசெய்தல் அல்லது வீதியிலுள்ள வடிகால்களில் கழிவுப் பொருள்களைப் போட்டுத் தடைசெய்தல் ஆகாது.

12. வீதிக்குச் சேதம் விளைவிக்கும் விதத்தில் மரக்குற்றிகள், கல் மற்றும் பொருள்களை வண்டிகளிலோ அல்லது இழுத்துச் செல்லுதலோ குற்றமாகும்.

13. வீதிக்குச் சேதம் விளைவிக்கும் விதத்தில் வடிகால், அணை, கான்முதலியவற்றைச் சேதப்படுத்தலாகாது.

14. வீதியோர வடிகால்கள் பழுதடையும் விதத்தில் வீட்டுத் தாவாரம் அமைத்தல், வண்டிகளில் பாரம் ஏற்றுதல், இறக்குதல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

15. வீதியிலுள்ள பாலம், மதவு அல்லது வடிகால்களை முழு அளவிலோ அல்லது சிறிய அளவிலோ மூடி, நீர் இலகுவாகப் போவதைத் தடுத்தல், அருகாமையில் இருக்கும் வீதிக்குரிய கான்களை உயர்த்தி நீர் போவதைத் தடுத்தல் குற்றமாகும்.

16. வீதிகளில் அதிகாரமின்றி வெட்டுதல், குழி தோண்டுதல் ஆகாது.

17. வீதிகளில் தடைசெய்யப்பட்டு வேலைகள் நடைபெறும் பொழுது அத்துமீறிப் பிரவேசித்தலாகாது.

18. வீதிகளுக்கு அருகாமையில் குடியிருப்பாளர்கள் வீதிக்கும் குடியிருப்புகளுக்கும் இடையிலுள்ள வடிகால் மீது பாலம் அமைக்கும் போது அவ் வீதிக்குரிய நிறுவனத்தின் அனுமதியைப்பெற்றுக்கொள்ளல் அவசியம்.

19. மாடு, ஆடு அல்லது வேறு மிருகங்களை வீதிகளில் கட்டியோ, கூட்டமாக நிறுத்தியோ அல்லது வீதியில் நடமாடவிடுவதையோ தவிர்த்தல் வேண்டும்.

20. வீதிக்கு அருகாமையில் கல், மண் மற்றும் கட்டடப் பொருள்கள், வெட்டப்பட்ட மரங்கள் திருத்தப்பட வேண்டிய வாகனங்கள், வண்டிகள் ஆகியவற்றை விடுதல் தவறாகும்.

21. இரவு வேளைகளில் மாட்டு வண்டிகள், வீதிகளில் பாவனையில் ஈடுபடும் போது வண்டியில் விளக்குப் பொருத்தப்படல் வேண்டும்.

22. வீதி ஓரங்களில் உள்ள மரங்களை வெட்டுதல், கொப்புகளை வெட்டுதல், குழை வெட்டுதல் முதலியன தவிர்க்கப்படல் வேண்டும். போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படும் இடத்தில் உரியவர்களுக்கு அறிவித்தால் அவர்களே அவற்றினைத் துப்புரவு செய்வர்.

மேற்கூறப்பட்டுள்ள விதிகள் யாவும் பொது மக்களின் நன்மை கருதியே ஏற்படுத்தப்பட்டவையென்பதை யாவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

—இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து முன்னணி தலைவர் கொலை

தமிழக இந்துமுன்னணியின் தலைவர் திரு. ராஜகோபாலன் (47 வயது) நேற்று மதுரையில் அவரது வீட்டிற்கு முன்னால் மூவர் கொண்ட கும்பல் ஒன்றினால் கொலை செய்யப்பட்டார்.

வீட்டிற்கு வெளியே அழைத்த அந்தக் கும்பல், அவரை கத்தியால் தாக்கி கொலை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் ராஜகோபாலனின் கொலை குறித்து கண்டனம் தெரிவித்துள்ளனர். (ஒ)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி செபமணி தங்கமோறா நீக்கிலஸ்

திருமதி செபமணி தங்கமோறா நீக்கிலஸ் அவர்கள் நேற்றுக் காலமானார். இவர் காலஞ்சென்ற ஜோன் நீக்கிலஸ் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஜுடித் ராஜரட்ணம், காலஞ்சென்ற ஜுலியஸ் பிறட்றிக் நீக்கிலஸ், திருமதி மெற்றில்டா பிச்சைத்தம்பி, கொட்வின் நீக்கிலஸ், ஜெறோம் நீக்கிலஸ், கியூபேட் நீக்கிலஸ், கொறட்டி திசவீரசிங்கி, டெலினி நீக்கிலஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜோன் அலோஷியஸ் ராஜரட்ணம், காலஞ்சென்ற சேவியர் பிச்சைத்தம்பி, றொனால்ட் திசவீரசிங்கி, திருமதி றோஸ் ஜெறோம், திருமதி செல்வமகள் நீக்கிலஸ் திருமதி சறோஜினி கியூபேட் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 11.10.94 பிற்பகல் 3.45 மணிக்கு இல 38, 5ம் குறுக்கு வீதி இல்லத்திலிருந்து யாழ். பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஜோன் அலோஷியஸ் ராஜரட்ணம் [மருமகன்]
38, 5ம் குறுக்கு வீதி
யாழ்ப்பாணம். [33290]

### திருமதி பசுபதிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை

(வேலணை மேற்கு)

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பசுபதிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ள அவர்கள் 10-10-94 திங்கட்கிழமை கொழும்பில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கா. பசுபதிப்பிள்ளை அவர்களின் அன்புத் துணைவியும் கார்த்திகேசு, விமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி, கிருஷ்ணகோபால் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ப. கார்த்திகேசு (மகன்)
16, பலாலி வீதி,
யாழ்ப்பாணம், (33289)

### கணபதிப்பிள்ளை கனகரத்தினம்

சண்டிலிப்பாய் வடக்கைச்சேர்ந்தவரும், முன்னாள் (இ. போ. ச. நடத்துநருமான கணபதிப்பிள்ளை கனகரத்தினம் அவர்கள் 10-10-94 காலை காலமானார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்புமகனும், சிவரத்தினம், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், யோகரத்தினம், இராசரத்தினம், அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரரும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசமணி, செல்லத்துரை, இராசம்மா, கனகம்மா, மற்றும் கண்ணம்மா, வயிரவநாதன் (நீர் கொழும்பு), அன்னலட்சுமி ஆகியோரின் அன்புமைத்துனரும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை, கணபதிப்பிள்ளை, மற்றும் தங்கம்மா, கந்தையா, நவரத்தினம், தங்கராசா, திருப்பதி ஆகியோரின் சகலனும், தேவராசா (சித்தன்கேணி - முன்னாள் திருமகள் அழுத்தக ஊழியர்), ஜீவராசா (ஜேர்மனி), விசயலட்சுமி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், இராசநாயகி, பாலகௌரி (ஜேர்மனி), மகாலிங்கம் (அக்கராயன் ப. நோ. கூ. ச. கிளை முகாமையாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிறிரஜனி, சுஜனி, குமரன், ரஜீபன், நிருசன் (ஜேர்மனி), முரளிதரன் (சுவிஸ்), தவராசா - சாருகாசினி (சுவிஸ்), சிறீதரன், (பிரான்ஸ்), உதயதரன் (அக்கராயன் ப. நோ. கூ. ச. ஊழியர்), ஆனந்தராசா (அக்கராயன் ப. நோ. கூ. ச. கிளை முகாமையாளர்), சுபாசினி ஆகியோரின் அன்புப் பேரனும், ஆர்த்திகா (சுவிஸ்) நிரோஜன், வினோபா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-10-94) செவ்வாய் காலை 10.30 மணியளவில் இரட்டையர்ப்புலம் வயிரவர் கோவிலுக்கு அருகில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக் கிரியைக்காக சொட்டுப்பனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. தேவராஜா (மகன்)
சண்டிலிப்பாய் வடக்கு (33277)

### இராசையா மரியம்மா

இராசையா மரியம்மா 9.10.94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் தொலைத்தொடர்பு திணைக்களத்தில் கடமையாற்றி, ஓய்வுபெற்ற சின்னத்தம்பி இராசையாவின் அன்பு மனைவியும் அன்ரன், தவமணி, ஜார்த்துராசா, யோகராணி, யோகராசா, அருள்ராசா, தர்சினி, குணராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், தவேந்திரராசா, ஆனந்தலட்சுமி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் றோசானி, லோஜினி, சர்மிலா, நிசாந்தன், நிசாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 11-10-94 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 23/1 புதுவீதி, கொய்யாத்தோட்ட இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. இராசையா [கணவன்]
28/1 புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். [33286]




யாழ். றோட்டறிக் கழக ஆதரவில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நடந்த யாழ்ப்பாணப் பாடசாலைகளின் இன்ரறக்ட் கழகங்களின் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகளின் போது இன்ரறக்ட் உறுப்பினர்கள் நடத்திய கண்கவர் உடற்பயிற்சிக் கண்காட்சியின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 'பி' பிரிவினர் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் 'சுண்ணாம்பு அடிப்படையிலான சிமெந்து பொருள்கள்' என்ற தலைப்பில் திரு. எஸ். ருத்திரலிங்கம் கருத்துரை வழங்குவார்.

### இன்று

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் கிளாலி பண்டிதர் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் இன்று (செவ்வாய்) திறந்து வைக்கப்படவுள்ளது. அந்த வீடமைப்புத் திட்டத்தில் சிறுவர் போசாக்கு நிலையம், தையல் பயிற்சி நிலையம், என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. (ஐ-117)

### மாலதி நினை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான சந்திகளில் அமைக்கப்பட்டிருந்த பந்தல்களில் மாலதியின் உருவப்படம் வைக்கப்பட்டு தீபம் ஏற்றப்பட்டிருந்தது.

அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளில் மாலதியின் உருவப்படம் வைக்கப்பட்டு அவை மக்களின் அஞ்சலிக்காக கொண்டு செல்லப்பட்டன. விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் ஊர்வலம் ஒன்று நேற்று மாலை திருநெல்வேலிச் சந்தியில் இருந்து ஆரம்பமானது.

மகளிர் அணியினர், போராளிகள் அணியினர், காவல் துறை அணியினர், மாணவர் அமைப்பு அணியினர் பாண்ட் வாத்தியங்களுடன் அணிவகுத்துவர பின்னே மாலதியின் உருவப்படம் தாங்கிய ஊர்தி வந்தது. ஊர்வலம் கூட்டம் நடைபெற்ற பல்கலைக்கழக மைதானத்தை அடைந்ததும் அங்கு நினைவுக்கூட்டம் ஆரம்பமானது.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஈகைச்சுடரை ஏற்றினார். கடற்புலிகளின் மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி மாலதி தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றினார்.

2 ஆம் லெப். மாலதியின் உருவப் படத்துக்கு அவரது தந்தையார் மாலை அணிவித்து ஈகைச் சுடரை ஏற்றினார்.

நினைவு நாளை ஒட்டி தனியார் அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் அனைத்தும் நேற்று மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துகளும் குறைந்து காணப்பட்டது.

[ஐ-3-4-13-15-89-117]

### 15 ஆம்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாள் நிகழ்ச்சிகளின் போது வழங்கப்படும்.

தமிழின்பக் கண்காட்சியில், சுகாதாரம், போசாக்கு, சுதேச வைத்தியம், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆக்கங்கள், தமிழர் வாழ்வியலில் பயன்படுத்திய பொருள்கள், தொல்பொருள்கள், சித்திர - சிற்ப - புகைப்பட கலைப் பொருள்கள், கணனி என்று பல பிரிவுகள் அமைக்கப்படும்.

நூல் கண்காட்சிப் பிரிவில் 1993 ஜூன் மாதம் தொடக்கம் 1994 ஜூன் மாதம் வரை எமது மண்ணைப் பற்றி வெளிநாடுகளில் பிரசுரமான நூல்களும், இங்கு வெளிவந்த நூல்கள் சஞ்சிகைகளும் சேர்க்கப்படும். (உ-4)

### உருளை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அங்கு மரணமானார்.

மர்மப் பொருள் வெடித்த போது அருகில் நின்ற ஸ்ரீஸ்கந்தராசா தினேஸ் (வயது 3) என்ற குழந்தையும், இராமு பாக்கியம் (வயது 50), தம்பு பொன்னுத்துரை (வயது 48) ஆகியோரும் காயமடைந்தனர். இவர்களில் 3 வயதான குழந்தை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளது. (ஐ-15-13)

### அரசு - புலிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அதிகாரிகள் யார் என்று கேட்டதற்கு காமினி, றொனி என்று பதில் அளிக்கப்பட்டது.

**ஏஜெண்ட் காமினி இப்போது கூறுவது**

இலங்கை அரசும், நாமும் பேச்சுவார்த்தை நடத்த முற்படும் போது, இந்திய உளவுத் துறையின் ஏஜெண்டான — எதிர்க்கட்சித் தலைவரான காமினி திஸநாயக்கா —

பேச்சுவார்த்தைக்கு இந்திய தலையீடு தேவை என்றும், இந்தியாவின் மேற்பார்வையில் பேச வேண்டும் என்றும் கூறுகிறார்.

மக்கள் நலனுக்காக விடிவுக்காக நாம் பேச்சுவார்த்தைக்கு செல்ல தயாரான போதும்கூட இந்தியா அதற்கு குறுக்கே நிற்கிறது.

**விழிப்புடன் மக்கள் செயல்பட வேண்டும்**

இந்திய அரசின் ஏஜெண்டுகள் எங்கும் இருக்கலாம் இங்கும் இருக்கலாம்.

அவர்களை மக்கள் இனங்காண வேண்டும். அதற்கு மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும். அவ்வாறானவர்களை இனம் கண்டு எமக்கு உதவவேண்டும்.

எமது போராட்டம் தனது நலனுக்கு பாதகமாக அமைகிறது என்று கூறிக்கொண்டு இந்தியா செயற்படுகிறது.

எமது போராட்டம் இந்தியாவுக்கு எதிரானதல்ல. எமது இனம் இலங்கை இராணுவத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை எதிர்த்துத்தான் நாம் போராடுகிறோம் என்ற உண்மையை இந்தியா ஏற்கமறுக்கிறது.

எமது போராட்டம் இந்தியாவின் நலனுக்கு எப்போதும் பாதகமாக அமையாது என்பதை இந்தியா உணர்ந்து எமது போராட்டத்தையும், மக்களின் அபிலாஷைகளையும் அங்கீகரிக்க வேண்டும். அப்போதுதான் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வெற்றிபெறும்.

காலம் காலமாக எமது போராட்டத்தை புறக்கணிக்காது, உடனடியாக எமது போராட்டம் தொடர்பான தனது கொள்கையை இந்தியா மாற்றவேண்டும்.

**மகளிர் அமைப்பின் பொறுப்பாளர் உரை**

இக் கூட்டத்தில் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி. ரதி பேசுகையில் கூறியதாவது -

''இதுவரை 518 பெண் போராளிகள் மாலதியின் வழியில் மக்கள் விடிவுக்காக தற்கொடையாளர்களாகியுள்ளனர். மகளிர் படையணி இன்று கரும்புலிகளாக, கடற்புலிகளாக, தரைப்படையாக தலைநிமிர்ந்து நிற்கிறது''— என்றார்.

கடற்புலிகள் மகளிர் படையணிப் பொறுப்பாளர் செல்வி பூரணி, திருமதி திலகவதி, செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி, உட்படப் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (உ-3)

### வீடு பார்க்க சென்றவர் மீது படையினர் சூடு

யாழ்ப்பாணம், ஒக். 11

நேற்றுக் காலை அளவெட்டிப் பகுதியில் உள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்ற இளைஞர் ஒருவர் படையினரின் வேட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

அளவெட்டி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து உரும்பிராயில் வசிக்கும் பொன்னுத்துரை ரவீந்திரன் (வயது 32) என்பவரே படுகாயமடைந்தார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்.

### புலிகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சாத்தியமாகும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது. பேச்சுவார்த்தை வெற்றி பெறவேண்டும் என்று தென்பகுதி மக்கள் விரும்புகிறார்கள் இதயசுத்தியுடன் பேச்சு நடக்கவேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைவர்களான திரு. கரிகாலன், திரு. ரவி ஆகியோரை சந்தித்துப் பேச வாய்ப்பு கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். சிங்கள மக்களும் இவர்களை விரும்புவார்கள்.

பொருண்மியக் கழகத்தின் திட்டங்களை நாம் படிக்க வேண்டும். கிராமிய மக்களுக்கு உதவும் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதை அறியமுடிந்தது. பல நல்ல அம்சங்கள் அவற்றில் உள்ளன.

அவர்கள் அறிமுகப் படுத்தியுள்ள கிராமிய மக்களுக்கான வங்கிக் கடன் திட்டம் நல்ல அம்சங்களைக் கொண்டுள்ளது. இந்த திட்டம் தென்பகுதிக்கும் விஸ்தரிக்கப் படவேண்டியதவசியம்.

கடற்றொழில் சம்பந்தப்பட்ட அவர்களின் திட்டங்களை அறிந்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக தெற்கில் இருந்து பலரை றோட்டறிக் கழகம் மூலமாக இங்கு அழைத்து வரவிரும்புகிறேன். அவர்கள் இங்கு முதலீடுகளைச் செய்வார்கள் என நினைக்கிறேன்'' — என்றார். (உ-3)

### பேச்சை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட வேண்டுமானால் முதலில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப் பட வேண்டும்.

எமக்கு விடிவு ஏற்பட வேண்டுமானால் முதலில் கடற்படை முடக்கப்பட வேண்டும்.

கடற்படை நடமாட்டத்தை முடக்கவே கப்பல்கள் தகர்க்கப்படுகின்றன; மூழ்கடிக்கப்படுகின்றன.

இந்திய ஆக்கிரமிப்புப்படை இங்கு தமது இராணுவ நடவடிக்கையை கோப்பாயில் ஆரம்பித்த போது முதலில் அப்படையை எதிர்த்து சமர் புரிந்தது மகளிர் படையணி தான். அந்தப் படையணிக்குத் தலைமை தாங்கிச் சென்றே மாலதி வீரமரணமடைந்தார்.

உலக வரலாற்றிலேயே தமிழீழப் பெண்கள் ஆயுதம் ஏந்தி போராட்டம் ஆரம்பித்த நாள் ஒக்ரோபர் 10 ஆகும். இந்த நாள் தமிழ் பெண்ணால் பெருமைப்படுகிறது.

பெண்கள் மறுமலர்ச்சிக்காகவும் விடிவுக்காகவும் போராட்டம் நடத்திய மாலதியின் பெயர் உலகளாவிய ரீதியில் வரலாற்றில் பொறிக்கக் கூடியது. பெண்களால் செய்ய முடியாதது எனக் கருதப்பட்ட ஒன்றைச் செய்துகாட்டி மாலதி சாதனை நிலைநாட்டிய நினைவு நாள் இன்றாகும் என்றார். (உ-3)

# தென் பகுதியில் இருந்து வெங்காயம் ஏற்றுமதி

கொழும்பு, ஒக். 11

தென்னிலங்கைப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

இலங்கையிலிருந்து வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

ஏற்றுமதியை ஆரம்பிக்கு முகமாக, 15 மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்தை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று, இன்று செவ்வாய்க்கிழமை மாலை தீவுக்குப் புறப்படுகிறது.

மாலைதீவு மட்டுமன்றி பாகிஸ்தான், சிங்கப்பூர், மத்திய கிழக்கு நாடுகள், தாய்வான் ஆகியனவும் இலங்கையின் பெரிய வெங்காயத்தை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன.

தென்னிலங்கை விவசாயிகள் உற்பத்தி செய்யும் பெரிய வெங்காயத்தை கூ.மொ.வி. ஸ்தாபனமே கொள்வனவு செய்து ஏற்றுமதியும், செய்ய ஏற்பாடாகி உள்ளது. [அ]

### அளவெட்டி படையினர் ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், ஒக். 11

அளவெட்டி வடக்கு அம்பனைப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று மாலை 4 மணியளவில் குடியிருப்பு பகுதிகள் மீது பலத்த ஷெல் தாக்குதல்களை நடத்தினர். அப்பகுதிகளில் இருந்து மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்துள்ளதால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (ஐ-15)

### தீர்வு ஒன்றைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் தாங்கள் என்ற எண்ணத்தைத் தமிழரிடையே தோற்றுவித்தன.

தமிழரின் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காண முன்னரும் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன.

பண்டா — செல்வா ஒப்பந்தம், டட்லி — செல்வா ஒப்பந்தம் ஆகியவை தொடக்கம் மாவட்ட அபிவிருத்திச் சபை, மாகாண சபை ஆகியன வரை காணப்பட்ட தீர்வுகள் ஒழுங்காக நடைமுறைப் படுத்தப்படவில்லை. அத்துடன் அவை தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவுமில்லை.

எனவே பிரச்சினைக்குத் தீர்வாக என்ன மாதிரியான நிர்வாக அலகை — இயந்திரத்தை உருவாக்கலாம் என்பதிலும் அப்படிக் காணப்படும் தீர்வை நடைமுறைப் படுத்துவதிலுமே தீர்வு வெற்றியளிப்பது தங்கியுள்ளது என்றார். (உ)

### வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஒக். 11

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணி அரச அச்சகத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

தேர்தல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார். (ஐ-எ-6)

### கொழும்பில் இருந்து விதை கிழங்கு

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு இம்முறை கொழும்பிலிருந்து400 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் த.சிவலோகநாதன் தெரிவித்தார்.

டினசறி இனத்தை சேர்ந்த இந்த விதை உருளைக்கிழங்கு இம்மாத இறுதிக்குள் கப்பல் மூலம் எடுத்து வரப்படும் எனவும் அவர் கூறினார்.

### சமாதான....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யில் பிரபல வீரர்களான மித்ரா வெத்தமுனி, மைக்கல் திலேரா, அனுரா தென்னக்கோன், துலிப் மெண்டிஸ், சிடத் வெத்தமுனி உட்பட 15 முன்னணி கிரிக்கெட் வீரர்கள் இடம் பெறுவர் என்றும் அவர் சொன்னார்.

''விளையாட்டு ஊடாக சமாதானம்''—என்ற தொனிப் பொருளில் கிரிக்கெட், உதைபந்து, கூடைப்பந்து, கரப்பந்து, வலைப்பந்து அணிகளை தாங்கள் திருகோணமலை உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று ஆங்காங்கே — நட்புறவு ஆட்டங்களில் பங்குபற்றியதாகவும் —

யாழ்ப்பாணத்துக்குக் கிரிக்கெட் அணியை அழைத்துவரும் முயற்சி வெற்றிபெற்றால் ஏனைய விளையாட்டு அணிகளை இங்கு அழைத்து வரவும், இங்கிருந்து அணிகளை தெற்குக்கு அழைத்துச் செல்லவும் முயற்சிகள் எடுக்கலாம் என்றும் அவர் மேலும் சொன்னார். (உ-3)


## இராஜ கோபுரத்திற்கு பொம்மைகள் அமைத்தல்

அரியாலை, பிரப்பங்குளம், மகாமாரி அம்மன் ஆலயத்தில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் இராஜ கோபுரத்திற்கு 200 பொம்மைகள் செய்து வைக்க வேண்டி (ஒப்பந்த அடிப்படை) உள்ளது.

மேற்படி நிர்மாண வேலையில் நன்கு அனுபவம் மிக்க திறமைவாய்ந்த சிற்பாசாரியார் உடனடியாக கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

த. தர்மேந்திரர் (செயலாளர்)

தொடர்பு:
சு. கமலநாதன் (பொருளாளர்)
காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம். (33281)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் [illegible] அச்சகத்தில் 11-10-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org